அத்தொழிலின் பலனைத் தக்கநேரத்தில் தப்பாமல் அடைவான். விஷங்கலந்த அன்னத்தைப் புசித்ததின் பலனை உடனே காண்பதுபோல, மனிதரும் தங்களுடைய செயலின் பயனை உடனே காண்பார்கள். உலகத்துக்குத் தீமையைச் செய்யும் கொடிய பாவிகளுடைய பிராணனை வாங்க *அரசனால் நான் கட்டளை யிடப்பட்டிருக்கிறேன். இப்பொழுது என்னால் விடுக்கப்படும் தங்கமிழைக்கப்பட்ட பாணங்கள் உனது உடலை ஊடுருவி, பாம்புகள் புற்றில் நுழைவதுபோல, பூமியைப் போழ்ந்து புக்கொளிக்கும். தண்டகாரணியத்தில நீ புசித்த ரிஷிகள் போயிருக்குமிடத்திற்கு, யுத்தத்தில் கொல்லப்பட்டு நீயும் நினது சேனையுடன் போகலாம். முன்னரே உன்னால் கொல்லப்பட்ட ரிஷிகள் இன்று விமானங்களிலிருந்துகொண்டு நீ எனது பாணங்களால அடிபட்டு மாண்டு நரகத்தில் வீழ்வதைப் பார்க்கப்போகிறார்கள். உனது இஷ்டப்பிரகாரம் நீ பொருதுபார். இழிகுலத்தோனே, உன்னால் கூடுமானதையெல்லாம் நீ செய். இன்று உனது தலையை, பனங்காயை அறுத்துத் தள்ளுவதுபோல, அறுத்துத் தள்ளுகிறேன்." இவ்வாறு இராமர் சொன்ன சொற்களைக் கேட்டுக் கோபமடைந்து கண்கள் சிவந்து கோபத்தால் ஒன்றுந்தெரியாதவனாகிக் கரன் சொல்லலுற்றான்:—"தசரத புத்திரா, போரில ஆற்றலில்லாத அரக்கர்களைக்கொன்றுவிட்டு, ஏன் வீணாக உன்னைப் புகழ்ந்துகொள்ளுகிறாய்? பலமும் பராக்கிரமமும் உள்ள சூரர்கள் ஊக்கமிகுதியால் செருக்கடைந்து ஒருபொழுதும தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்ள மாட்டார்கள். நல்லுள்ளமில்லாத அற்பமான க்ஷத்திரியர்கள்தான் தங்களைத் தாங்களே, நீ உன்னைப் புகழ்ந்துகொள்ளுவதுபோல், புகழ்ந்துகொள்ளுவார்கள். போர்க்களத்தில் எந்தவீரன் தன்குலத்தை எடுத்

கரன் மறுமொழி.

* தசரதர் அல்லது பரதர்.

துக் கூறுவான்? மாண்டுபோகும் காலம் நெருங்கியபோது எவன் தன்னைப்பற்றிப் புகழ்பாடுவான்? தருப்பைப்புல் தீயில் காய்ச்சப்பட்ட தங்கநிறமான பித்தளை கறுப்பது போல் உனது தற்புகழ்ச்சியால் நீ உனது அற்பத்தனத்தை வெளியாக்கிவிட்டாய். இவ்விடத்தில் நான் கதையைப் பிடித்துக்கொண்டு, அசைக்கக்கூடாத பெரும்பருவதம் தாதுராகத்தால் விளக்கமுற்று நிற்பதுபோல், நிற்பது உனது கண்ணிற்குப் புலப்படவில்லை. நான் கையில் கதையைப் பிடித்துக்கொண்டு உனது பிராணனை மட்டுமன்று, இம்மூவுலகத்திலும் உள்ளாருடைய பிராணன்களையும், கையில் பாசம் பிடித்த யமன்போல், தனியே வாங்கிவிடவல்லேன். நான் உனக்குச் சொல்லவேண்டிய சங்கதிகள் நிரம்ப இருக்கின்றன. அவற்றைச்சொல்ல இப்பொழுது எனக்குச் சாவகாசமில்லை. சூரியன் அஸ்தமனமாகுங்காலம் நெருங்குகிறது. அதன் பிறகு யுத்தத்துக்கு இடையூறுவந்துவிடும். நீ பதினாலாயிரம் ராக்ஷசரைக் கொன்றதனால் அவர்கள் பந்துக்கள் விடும் துக்கக்கண்ணீரை இன்று நான் உன்னை வதைத்துத் துடைத்துவிடுகிறேன்.'' இவ்வண்ணஞ் சொல்லிக் கரன் வெகுகோபத்துடன் அழகான கேயூரமணிந்த தனது கைகளால் எரிகின்ற இடிபோன்ற கதையைத் தூக்கி இராமர்மேல் எறிந்தான். அவ்வாறு கரனுடைய கையிலிருந்து விடப்பட்ட கதை ஆகாசத்தில்ஜ்வலித்துக்கொண்டு, அநேகவிருக்ஷங்களையும் புதர்களையும் நீறாக்கிக்கொண்டு, இராமரைக் கிட்டிற்று. அவ்விதமாகத் தம்மைநோக்கி அக்கினிபோல் விளங்கிக் காலனுடைய பாசத்துக்கொப்பாக வந்துகொண்டிருந்த கதையை இராமர் தமது பாணங்களால் ஆகாயத்திலேயே துகளாக்கிமாற்றினர். அப்போது அது, மந்திரத்தினால் விழுத்தப்பட்ட சர்ப்பம்போல, உடைந்து பூமியில்விழுந்தது.

கரன் கதை உடைந்தது.

முப்பதாஞ்சருக்கம்.

கரன்வதை.

இராமர் கரனை இகழ்தல்.

இராமர் அக்கதையைப் பாணங்களால் துண்டித்து, தாம் எப்பொழுதும் தருமத்தில் வாஞ்சையுள்ளவராகையால் கொஞ்சம் புன்னகையுடன் கரனைப்பார்த்துக் கோபமாகக் கூறினார்:—"ராக்ஷசப்பதரே, நீ உனது பலம் முழுமையையும் காண்பித்தது இதுதான்! என்கையால் சக்தியற்று ஏன் வீணாகக் குமிறுகிறாய்? உனது கதை என் பாணங்களால் பிளக்கப்பட்டு அதோபூமியில் விழுந்திருக்கிறது! வீண்பெருமை பாராட்டிக்கொண்ட உனது செருக்குக்குக் காரணமாகவிருந்த கதையின்கதி இப்படியாக முடிந்தது! மாண்டுவிட்ட அரக்கர் பந்துக்கள் துக்கக்கண்ணீரைத் துடைப்பதாக நீ சொன்ன சொல்லும் பொய்யாக முடிந்தது. நீசனாகவும், கொடிய செய்கையுள்ளவனாகவும், பொய்மையே பொருந்தியவனாகவும் இருக்கும் உனது உயிரை, கருடன் அமிர்தத்தைக் கவர்ந்ததுபோல, நான் கவர்ந்துவிடுகிறேன். இன்று உனது கழுத்து எனது பாணங்களால் அறுக்கப்பட்டுக் கீழேவிழ, உனது உடலிலிருந்து கொப்புளித்துப் பெருகும் இரத்தத்தை இப்பூமி குடிக்கட்டும். இன்று உனது தேகம் புழுதியாடி, கைகளும வெட்டுண்டு, இஷ்டமில்லாத பெண்போல நீ பூமியைத் தழுவிக்கொண்டு தூங்கலாம். நீ அவ்வாறு கண்விழியாத் தூக்கம் தூங்கிவிட்டபின்பு, இத்தண்டகாரணியம் ஒதுக்கிடந் தேடி வருபவர்களுக்கு உறைவிடமாய் இருக்கும். எனது பாணங்களால் ஜனஸ்தானத்தில் இருக்கும் ராக்ஷசர்கள் எல்லாரும் தொலைந்தபிறகு இவ்விடத்தில் ரிஷிகள் பயமின்றிச் சஞ்சரிப்பார்கள், மற்றவர்களுக்குப் பயத்தை

உண்டாக்கிக்கொண்டு இக்காட்டில் சஞ்சரித்து வந்த அரக்கியர்கள், தங்கள் பந்துக்கள் நாசமடைந்த காரணத்தால் முகம்வாடி, பயந்து, கண்ணும் கண்ணீருமாக வேறிடங்களுக்கு இன்று ஓடிவிடுவார்கள். உங்கள் குலத்துக்கு ஒத்த குலத்தில் வந்த உங்களுடைய மனைவியர்கள், இன்று சோகம் இத்தன்மையது என்பதை அறிந்து, தங்கள் பொருள்களை முழுவதும் இழந்துவிடுவார்கள். கொடியவனே, அற்பனே, பிராமணகண்டகனே, உனக்காகவல்லவா தினந்தோறும் முனிவர்கள் நடுங்கி ஊக்கமிழந்து நெடுநாளாக அவிசை ஓமத்தீயில் ஓமம்செய்கிறார்கள்?"

இவ்விதமாகப் போர்க்களத்தில் இராமர், கோபத்தால் சொன்ன சொல்லைக் கேட்டுக் கரன் கடுகடுத்துச்சொல்லலுற்றான் :—"நீ வெகு செருக்கடைந்திருக்கிறாய் ; பயமென்பது உன்னைப்பற்றி யிருக்கவும் பயமற்றுப் பேசுகிறாய். மரணம் கிட்டிவிட்டபடியால் இன்னது சொல்லலாம் இன்னது சொல்லக்கூடாதென்பதைக்கூடநீ அறியவில்லை. அதுவும் நியாயந்தான் ; ஏனெனில், காலபாசத்தால் கட்டப்பட்டவர்கள் புலன்களை இழந்துவிடுகிறபடியால் செய்யத்தக்கது இது செய்யத்தகாதது இதுஎன்று பகுத்தறிய மாட்டார்கள்." இராமரைப்பார்த்து இவ்வாறு சொல்லிக்கொண்டே புருவங்களை நெரித்துச் சுற்றிலும் கரன் பார்த்துப் பக்கத்தில் ஆசசாமரமொன்று நிற்பதைக் கண்டான். போர்க்களத்தில் ஆயுதத்திற்காகச் சுற்றிப்பார்ப்பவன் கீழுதட்டைக் கடித்துக்கொண்டு அதைப்பிடுங்கிக் கைகளால் உயரத்தூக்கி வெகு பலமாக ஒரு கூச்சல் போட்டு "நீ இத்துடன் மாண்டாய்" என்று சொல்லி இராமர்மேல் வீசியெறிந்தான். வெகு பராக்கிரமம்பொருந்திய இராமர் அவ்வாறு தம்மை நோக்கிவரும் அம்மரத்தைத் தமது பாணங்களால் துண்டித்து இனிச் சீக்கிரம் போரில் கரனைக் கொன்றுவிட வேண்டுமென்று கோபங்

கொண்டார். அந்தக் கோபத்தால் இரர்மர் தேகம்வெயர்த்துக் கண்கள்சிவந்து ஆயிரம் பாணங்களைக் கரன்மேல் செலுத்தினர். அப்பாணங்கள் தைத்தவிடங்களிலிருந்து இரத்தம் குமிழியிட்டுப் பொங்கி, மலையின் பக்கங்களிலிருந்து அருவிகள் பெருகி ஓடுவதுபோல, ஓடிற்று. இராமர் எய்த பாணங்களினல் கரன் சோர்ந்து, இரத்தத்தின் நாற்றத்தால் புத்திமயங்கி, அவரிருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடிவந்தான். தேகம் முழுமையும் இவ்வாறு இரத்தம்வழியத் தம்மை நோக்கி ஓடிவரும் கரனைக் கண்டு ஆயுதபாணியாகிய இராமர் திடீரென்று இரண்டடி பின்வாங்கினர். பிறகு கரனை வதைசெய்வதற்காக, அக்கினிக்கொப்பாய், மற்றொரு பிரமதண்டம்போல விளங்கும் பாணமொன்றைக் கையிலெடுத்தார். அது புத்திமானகிய தேவேந்திரனல் கொடுக்கப்பட்ட பாணம். அப்பாணம் இராமருடைய வில்லிலிருந்து விடுக்கப்பட்டு, இடிபோல முழங்கிக்கொண்டு, கரன்மார்பில் பாய்ந்தது. கரன், திருவெண்காட்டில் ருத்திரனல் தஹிக்கப்பட்டு அந்தகாசுரன் மாய்ந்ததுபோல, இராமருடைய சராக்கினியால் தஹிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான். வச்சிராயுதத்தால் விருத்திராசுரன் மாண்டதுபோலவும், நுரையால் நமுசி மாண்டதுபோலவும், இடியால் வலாசுரன்மாண்டது போலவும், கரன் இராமபாணத்தால்மாண்டுவிழுந்தான்.

கரன் வதை.

பிறகு ராஜரிஷிகளும் மற்ற ரிஷிகளும் சேர்ந்து இராமரைக்கண்டு களித்து "இதன்பொருட்டே பாகசாசனனகிய மகேந்திரன் சரபங்கருடைய புண்ணிய ஆச்சிரமத்துக்கு வந்தனன். கொடியசெயல்புரியும் இவ்விராக்ஷசர்களை வதைக்கும் பொருட்டே மகரிஷிகளும் தங்களை அனேக உபாயங்களால் இக்காட்டுக்குக் கொண்டுவந்தார்கள். நாங்கள் உத்தேசித்தகாரியம் முடிந்துவிட்டது. மகரிஷிகள் இனிப்

ரிஷிகள் களிப்படைந்தது.

பயமின்றித் தவம்புரிவார்கள்" என்று சொன்னார்கள். இதற்குள் தேவர்களும் சாரணர்களும் வியப்படைந்து ஆகாசத்தில் தோன்றித் துந்துபி முழக்கி, வெகு சந்தோஷமுற்று இராமர்மேல் புஷ்பமாரி பொழிந்தார்கள். "ஒன்றரை முகூர்த்தத்தில் இராமர் தமது கூர்மையான அம்புகளால் பயங்கரமான தொழில்கள்புரிந்துவந்த கரன் தூஷணன் முதலிய அரக்கர்கள் பதினாலாயிரம்பெயர்களையும் போரில் வதைத்தார். ஆகா! எவ்வளவு பெருங்காரியம் இராமர் செய்தார்! என்ன சாமர்த்தியம்! என்ன பராக்கிரமம்! இது விஷ்ணுவின்பராக்கிரமம் போலல்லவா காண்கிறது" என்று இவ்விதமாகச் சொல்லிக்கொண்டு தேவதைகள் தங்கள்தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

தேவர்கள் களிப்படைந்தது.

அச்சமயத்தில் வீரராகிய லக்ஷ்மணர் சீதையுடன் மலைக் குகையைவிட்டு வந்துசந்தோஷமாக ஆச்சிரமத்துள் புகுந்தார். வெற்றிபெற்ற இராமரும், மகரிஷிகள் ஆராதிக்க, லக்ஷ்மணர் பூஜிக்க, ஆச்சிரமம்சேர்ந்தார். சத்துருக்களைக் கொன்று, பெரிய ரிஷிகளுக்கெல்லாம் சுகத்தை உண்டுபண்ணின தனது கணவரான இராமரைச் சீதைகண்டு களிகூர்ந்து ஆநந்தத்தால் தழுவினாள். ராக்ஷசக்கூட்டங்கள் மாண்டதையும் இராமர் காயமின்றி இருந்ததையும் சீதை பார்த்துச் சந்தோஷமடைந்து ஆனந்தக்கடலில் மூழ்கினாள். பிறகு சந்தோஷமடைந்த மகரிஷிகளால் பூஜிக்கப்பட்ட பகைவரேறாகிய தனதுகணவனை ஜானகி மறுபடியும் தழுவிக் களித்தமுகத்தோடு பேருவகையுற்றாள்.

சீதை களிப்படைந்தது.

முப்பத்தொன்றாஞ்சருக்கம்.

அகம்பனன் இலங்கையடைந்து ஜனஸ்தானத்திலிருந்த கரன் முதலிய ராக்ஷசர்கள் இராமரால் அழிந்ததை இராவணனுக்குத் தெரிவித்து அவனைச் சீதையை அபகரிக்கும்படி வேண்டுதல்.

பின்பு அகம்பனன் ஜனஸ்தானத்தை விட்டு வெகு வேகத்துடன் சென்று இராவணனைப்பார்த்து" அரசனே, ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் எல்லாரும் வதைக்கப்பட்டார்கள். கரனும போரில் மாண்டான். நான்மாத்திரம் வெகுகஷ்டப்பட்டுப் பிழைத்துவந்தேன்" என்று சொன்னான். இவ்வாறு அகம்பனன் சொன்னசொல்லை இராவணன் கேட்டுக் கோபத்தால் கண்கள் சிவந்து அவனைக் கொளுத்திவிடுவதுபோலப் பார்த்து "தனது ஆயுண் முடிந்து எனது அழகான ஜனஸ்தானத்தை அழித்தவன்யாவன்? இப்பொழுது இவ்வுலகத்தில் ஒருநாளும் வாழமுடியாத வழியைத் தேடிக்கொண்டவன் யாவன்? எனக்குக் கெடுதல் செய்தபின்பு அவன் இந்திரனாக இருபபினும், அல்லது குபேரன், யமன், விஷ்ணு இவர்களில் ஒருவனாக இருப்பினும் ஒருபொழுதும் சுகமென்பதை அடையான். நான் காலனுக்கும் காலன்; நெருப்பையும் கொளுத்துவேன்; சாவுக்கும் சாவுவரச் செய்வேன். கோபம் கொண்டால் நான் சூரியனையும் நெருப்பையுங்கூட எரித்துவிடுவேன். எனது பலத்தால் காற்றின் வேகத்தைக்கூட நான் தடுக்கமாட்டுவேன்" என்று சொன்னான். அகம்பனன் பயத்தால் நடுங்கிக் கை கூப்பித் தனக்கு அபயம் கொடுக்கவேண்டுமென்று தசக்கிரீவனை வேண்டிக்கொண்டான். ராக்ஷசோத்தமனான இராவணனும் அவனுக்கு அபயம்கொடுத்தான். பிறகு, அகம்பனன் கொஞ்சம் தைரியமடைந்து "ஸ்ரேஷ்டமான

ஜனஸ்தானத்தை அழித்தவன்யார் என்று இராவணன் வினவியது.

அங்கமுள்ளவனும், யௌவனமுள்ளவனும், ரிஷபத்தின் பிடர்போன்ற பிடரை உடையவனும், உருண்டு நீண்டு அழகாயுள்ள கரங்களை உடையவனும், நிகரற்ற பலபராக்கிரம முடையவனும், வீரனும்,கீர்த்தியுள்ளவனும், ஸ்ரீமானும், தசரதமன்னவனுடைய குமாரனுமான இராமனென்பவன் ஒருவனிருக்கிறான். அவன் பெரும்புகழ் படைத்தவன்; பலவிதமான சம்பத்தடைந்தவன். அவன்தான் ஜனஸ்தானத்தை நாசம்பண்ணினவன்; கரனையும் தூஷணனையும் வதைத்தவன்" எனக் கூறினன். அகம்பனன் கூறியமொழியை ராக்ஷசவேந்தனான இராவணன் கேட்டு ஆதிசேடன்போலப் பெருமூச்செறிந்து "அகம்பனா, இராமனென்பவன் யார்? இந்திரனுடன் சேர்ந்துகொண்டு தேவர்களெல்லாருடனும் ஜனஸ்தானத்துக்கு வந்திருக்கிறானா என்ன" என்றுவினவ, அகம்பனன் கேட்டு அம்மகாத்துமாவின் பலத்தையும் பராக்கிரமத்தையும் வருணிக்கத்தொடங்கினான் :—"இராமன் வெகுபராக்கிரமம் உள்ளவன்; வில்லாளர்க்கெல்லாம் மேலானவன்; திவ்யமான அஸ்திரங்களின் பயிற்சி நன்றாக உடைமையால் யுத்தத்தில் இந்திரனுக்கொப்பானவன். அவனுக்குச் சரியான பலமுள்ள அவன் தம்பி லக்ஷ்மணன் சிவந்தகண்களுடையவன்; பேரிபோல ஒலிக்கும சத்தமுள்ளவன்; சந்திரன்போன்ற முகமுடையவன். அவர்களுடைய சேர்க்கை காற்றுடன் நெருப்புச் சேர்ந்ததுபோலிருக்கிறது. வெகு பாக்கியம்பெற்று விளங்கும் அரசர்களுள் உத்தமனான இராமனாலேதான் ஜனஸ்தானம் அழிக்கப்பட்டது. மகாத்துமாக்களான தேவர்கள் ஜனஸ்தானத்துக்கு வரவில்லை. இவ்விஷயத்தில் உனக்குச் சந்தேகம் வேண்டாம். இராமன் விடுக்கும் தங்கப்பூண்கட்டிய சரங்கள் எல்லாம், ஐந்துதலை நாகங்கள்போல், அரக்கர்கள் உயிரைக் குடித்துவிடுகின்றன. பயந்து ஓடும் அரக்கர்கள் தாம்போ

அகம்பனன் இராமருடைய வலிமையைக் கூறல்.

குமிடங்களிலெல்லாம் இராமனைக் காணுகிறார்கள். ஓ பாப ரஹித, இவ்விதமாகத்தான் இராமன் ஜனஸ்தானத்தை அழித்தான்." இவ்வாறு அகம்பனன்சொன்னசொல்லை இராவணன்கேட்டு "இதோ நான் இராமலக்ஷ்மணர்களைக் கொல்லஜனஸ்தானம்செல்லுகிறேன்" என்றான். அதைக் கேட்ட அகம்பனன் சொல்லலுற்றான் :—"அரச, இராமனுடைய பலத்தையும் பராக்கிரமத்தையும்பற்றி நான் உண்மையாய்ச் சொல்வதைக் கேள். வெகு புகழ்பெற்ற இராமன் கோபித்தால் அவனை வெல்ல ஒருவராலும்முடியாது. நன்றாக நீர்நிரம்பி வேகமாக ஓடும் மஹாநதியின் வேகத்தைக்கூடத் தனது பாணங்களால் அவன் தடுப்பான்; நக்ஷத்திரங்களையும் கிருகங்களையும் ஆகாயத்தில் நின்று விழச்செய்வான்; இவ்வுலகம் ஒருகால் முழுகிவிட்டால் அதையும் தூக்கிநிலைநிறுத்துவான்; சமுத்திரத்தின் கரையைப் பிளந்துவிட்டுப் பூமிமுழுவதையும் வெள்ளத்தில் அமிழச்செய்வான்; சமுத்திரத்தின் வேகத்தையும் வாயுவின் வேகத்தையும் தனதுபாணங்களால் அடக்குவான். அப்பெரும் புகழ்பெற்றவன் தன் பராக்கிரமத்தால் இவ்வுலகங்களை எல்லாம் அழித்து மறுபடியும் உண்டாக்க வல்லவன். ஓ தசக்கிரீவ, இராமனை நீயாவது, அல்லது அரக்கர்கணமாவது ஜெயிப்பது, சுவர்க்கலோகம் பாபிகளுக்குக் கிட்டாதவாறுபோல், சிறிதும் கூடாது. எல்லாத் தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடினும் இராமனைக் கொல்லமுடியாதென்பது என் எண்ணம். ஆனால், அவனைக்கொல்ல உபாயமொன்றுண்டு. அதை நான் சொல்லுகிறேன், சற்றுக்கவனமாகக் கேள். சீதை என்ற மெல்லியலாள் அவனுடைய மனைவி. அவள் இவ்வுலகத்திலே உத்தமமான பெண். அவள் நல்ல யௌவனபருவமுள்ளவள். அவளது அவயவங்கள் ஒவ்வொன்றும் சரியாக அமைக்கப்பட்டுள்ளன. பெண்களுக்குள் ஓரிரத்தி

அகம்பனன் சீதையை வர்ணித்தல்.

னம்போதுமவள் மணிகளிழைக்கப்பட்ட ஆபரணங்கள் பூண்டு விளங்குகிறாள். தேவப்பெண், கந்தர்வப்பெண், அப்சரஸ்பெண், அசுரப்பெண் ஒருவரும் அவளுக்குச் சமானம் இல்லை. பின்னர் மானிடப்பெண் எப்படி அவளுக் கொப்பாவாள்? ஆகையால், நீ எப்படியாவது முயன்று இராமனைவஞ்சித்து அவனுக்குத்தெரியாமல் அவன்மனைவியைக்காட்டிலிருந்து தூக்கிக்கொண்டுபோய்விடவேண்டும். அவளிடம் அவனுக்குக் காதல் கரையில்லையாதலால் அவள் போனபின்பு அவன் தன்னுயிரை விட்டுவிடுவான்.'' இவ்வண்ணம் அகம்பனன் சொன்ன சொல் அரக்கர் மன்னவனாகிய இராவணன் மனத்திற்கு ஒத்திருந்தது. அவன் சிறிதுநேரம் சிந்தித்து அகம்பனனைநோக்கி "ஆம்; நீசொன்னது நன்றாகவிருக்கிறது. நான் எனது சாரதியுடன் புறப்பட்டுக்காலையில் தனிமையாய் இராமனிருக்குமிடம் போகிறேன். இவ்வழகிய மாநகருக்குச் சீதையைக் கொண்டுவந்துவிடுகிறேன்'' என்று சொன்னான். அதன் பின் இராவணன் சூரியனுக் கொப்பான கோவேறுகழுதைகள் பூட்டிய இரதத்தின்மேல் ஏறி எண்டிசைகளையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு புறப்பட்டான். ஆகாசமார்க்கமாகப் போகும் அரக்கர் மன்னவன் தேர், மேகத்தினிடையே ஊர்தரும் சந்திரன்போல, விளங்கிற்று. இராவணன் நெடுந்தூரம் போய்த் தாடகையின் குமாரனாகிய மாரீசன் வசித்துக்கொண்டிருந்த ஆச்சிரமத்தை அடைந்தான். மாரீசன் தன்னை நாடிவந்த மன்னவனுக்குத் திவ்வியமான உணவுகளையும் பானங்களையும் கொடுத்து உபசாரம்பண்ணினான். அன்றியும், மாரீசன் தானாகவே அர்க்கியம், ஆசனம் முதலியவைகளால் இராவணனை உபசாரம் பண்ணி அவனைப்பார்த்து பொருள் பொதிந்த சொற்களால் "ஓ ராஜா, ராக்ஷசேந்திரா, நின் குடிகளுக்கு ஒருவிதமான குறைவும் இல்லையே? உன்னைப்பார்த்

இராவணன் மாரீசனிடம் சென்றது.

தால் சந்தேகிக்க வேண்டியதாக விருக்கிறது. தனியே இவ்வளவு வேகமாக நீ இவ்விடம் வந்த காரணமென்ன?" என்று கேட்டான். மாரீசனிவ்வண்ணம் கேட்க, வெகு பராக்கிரமமுள்ள இராவணன் "ஐய, வெகு புகழ் பெற்ற இராமன் ஜனஸ்தானத்தில் இருந்த காவலர்களை எல்லாம் கொன்றுவிட்டான். அழித்தற்கரிய ஜனஸ்தானம் முழுவதும் யுத்தத்தில் அழிந்துவிட்டது. நான் இப்பொழுது இராமன் மனைவியைக் கவர்ந்துகொண்டு வரப்போகிறேன். அதற்கு நீ சகாயம் பண்ணவேண்டும்" என்று கூறினான்.

ராக்ஷசேந்திரன் சொன்னசொல்லை மாரீசன் கேட்டு அவனைப்பார்த்து "மித்திரன்போல எந்தச் சத்துரு சீதையைப்பற்றி நினக்குச் சொன்னான்? ஓ ராக்ஷசசிங்கமே, நீ க்ஷேமமாக இருப்பதைச் சகிக்காத துஷ்டன் யாவன்? 'சீதையைத் தூக்கிவந்து விடு' என்று நின்னிடம் சொன்னவன் எவன்? அவன் யார்சொல். அரக்கர் குலத்தினுடைய சிகரத்தைச் சிதைக்கக்கருதினவன் எவன்? இந்தத் தொழிற்கு நின்னை ஏவினவன் நினக்குச் சத்துருவேயன்றி வேறல்லன். அதற்குச் சந்தேகமில்லை. அவன் நின்னைக்கொண்டு பாம்பின் வாயிலிருக்கும் விஷப்பல்லைப்பிடுங்க எண்ணுகிறான். நின்னை இந்தக் கெட்ட வழியில் செலுத்த நினைத்தவன் எவன்? சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கும் நின் தலையில் அடித்தவன் யாவன்? இராவணேசுவரா, இராகவனை ஒரு மதயானையென்று கருது; அவனுக்குக் குடிப்பிறப்பே துதிக்கை; பராக்கிரமமே மதம்; நீண்டபாகுகளே கொம்புகள். அவனைப் போரில் கண்ணெடுத்துப் பார்க்கவும் நீ தக்கவனல்லன்? அவன் வாசனையைத் தூரநின்று மோந்துபார்த்துவிட்டு நீ ஓடிவிடவேண்டும். அவன் போரில் சிங்கமாயிற்றே. அவனுக்குத் தைரியமே வால்; பளபளப்பான

மாரீசன சீதையைக் கவரவேண்டாம என்று இராவணனைத தடுததல்.

கத்திகளே பற்களாம்; பாணங்களே அங்கம்; ராக்ஷசர்கள் என்ற மான்களை எப்பொழுதும் கொல்லுவது செயல். தூங்கிக்கொண்டிருக்கும் அப்படிப்பட்ட சிங்கத்தை எழுப்புவது சரி அன்று. விற்களாகிய முதலைகளையும், பாணங்களைவிடும் கைவேகமாகிய பெருஞ்சேற்றையும், பாணங்களாகிய அலைகளையும், போர் பொருதலாகிய பிரவாகத்தையும் உடைய வெகுபயங்கரமான இராமனென்னும் சமுத்திரத்தில், ராக்ஷசேந்திரா, நீ விழுந்துவிடாதே. இலங்கை நாயக, கோபங்கொள்ளற்க; அரக்கரேறே, சௌக்கியமாக வந்தவழியே திரும்பி இலங்கைக்குச் செல். நீ நின் மனைவிமார்களோடு எப்போதும் இன்புற்று வாழ்ந்திரு. இராமன் தன் மனைவியோடு வனத்தில் வசிக்கட்டும்" என்றான். மாரீசன் இவ்வாறு சொல்ல, தசக்கிரீவன் இலங்கை சென்றனன்.

முப்பத்திரண்டாஞ்சருக்கம்.

சூர்ப்பணகை இலங்கைசென்று தனக்கு நேரிட்ட அவமானத்தையும் அரக்கர்களுக்குவந்த ஆபத்தையும் இராவணனிடம் சொல்லிப் புலம்பல்.

இராமர் ஒருவரே கொடிய செயல்கள் செய்துவந்த பதினாலாயிரம் அரக்கர்களையும், திரிசிரனுடன் தூஷணனையும், கரனையும் வதைத்ததைக் கண்ட சூர்ப்பணகை மேகம்போலக் கர்ச்சித்தாள். இராமர் செய்த செயற்கரிய காரியத்தை அவள் கண்டு நடுநடுங்கி, இராவணன் அரசு செய்யும் இலங்கையை நோக்கி ஓடினாள்.

இராவணன் அரசிருக்கை.

அவ்விடத்தில் தனது விமானத்தில், தேவர்கள் மத்தியில் இந்திரன் வீற்றிருப்பது போல, மந்திரிமார்கள் சூழ மிக்க பொலிவோடு இராவணன் வீற்றிருக்கக் கண்டாள். சூரியன் போல ஒளிரும் தங்கத்தால் செய்யப்பட்ட உயர்ந்த ஆசனமொன்றில்

தங்கவேதிகையின் மத்தியில் கொழுந்து விட்டெரியும் ஹோமத்தீப்போல, தேவர்கள், கந்தர்வர்கள், பூதங்கள், மகாத்துமாக்களாகிய இருஷிகள் முதலியவர்களால் ஜெயிக்க முடியாதவனும், வாயைப் பிளந்து கொண்டு உட்கார்ந்திருக்கும் யமன் போலப் பயங்கரமானவனும், தேவர்களுடனும் அசுரர்களுடனும் போர்புரிந்த காலத்தில் வஜ்ஜிராயுதத்தாலும் இடியாலும் உண்டான தழும்புகளையும், ஐராவதத்தின்கொம்புகள் குத்திய தழும்புகளையும் மார்பில் உடையவனும், இருபது தோளும், ஒருபது முகமும், அழகான ஆடைகளும், விசாலமான மார்புமுள்ளவனும், எல்லா ராஜலக்ஷணங்களும் அமைந்தவனும், வைடூரியமணியின் நிறமுடையவனும், ஆடகத்தாலாய குண்டலங்களை அணிந்தவனும், அழகான கைகளும், வெண்மையான பற்களும், மலைபோலப் பெரிய முகமும் உடையவனும், தேவர்களுடன் போர்புரிந்தபொழுது விஷ்ணுவின் சக்கரத்தால் நூறுதரம் அடிபட்டவனும், தேவர்களுடைய ஆயுதங்களால் குத்துண்ட உடலையுடையவனும், கலக்கக்கூடாத சமுத்திரங்களைக் கலக்குபவனும், பெருமலைகளைப் பிடுங்குபவனும், தேவர்களைப் பிசைபவனும், தருமத்தை அழிப்பவனும், பிறர் மனைவிகளைக் கற்பழிப்பவனும், உத்தமமான சகலவித ஆயுதப்பயிற்சியிலும் தேர்ந்தவனும், யக்ஞங்களுக்கு எப்போதும் இடையூறு செய்பவனும், ஒருகாலத்தில் போகவதி என்ற நகரஞ்சென்று வாசுகியை வென்று தக்ஷகனுடைய அன்பான மனைவியை எடுத்தோடினவனும், கைலாசபருவதத்துக்குச் சென்று குபேரனைச்செயித்து நினைத்தவிடம் செல்லும் புஷ்பகம் என்ற விமானத்தைக் கொண்டுவந்தவனும், திவ்வியமான சைத்திரரதம் என்ற பூங்காவையும் அதிலிருந்த தாமரை ஓடையையும் நந்தனவனத்தையும் தேவர்களுடைய தோட்டங்களையும் அழித்தவனும், மலைக்கொப்பான தனதுதேகத்

தோடு எழுந்து நின்று இருகரங்களையும் நீட்டி வெகுகாந்தி யுடன் உதிக்கும் சூரிய சந்திரர்களைத் தடுத்துவிடுபவ னும், பதினாயிரம் வருஷகாலம் காட்டில் தவம்புரிந்து சுயம் புக்கடவுளுக்குத் தனது தலைகளை அறுத்து ஓமம் பண்ணி னவனும், யுத்தத்தில் மானிடர் நீங்கலாக, மற்றத் தேவர் கள், தானவர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், பதகர்கள், உரகர்கள் முதலியவர்களால் அழிவில்லாதவனும், பெரு வலியின் செருக்கால் அந்தணர்கள் மந்திரங்களோதி யாகத்தில் ஹோமம் பண்ணும் அவிசையும் தேவதை களுக்கு அவ்வந்தணர்கள் கொடுக்கும் பாகங்களையும் அவர்கள் பானம்பண்ண வைத்திருக்கும் சோமபானத்தை யும் நாசம்பண்ணுபவனும், யக்ஞத்தை அழிப்பவனும், எல் லாருக்கும் கொடுமைசெய்பவனும், அந்தணர்களை வதைப் பவனும், கெட்டநடத்தை உள்ளவனும், தயையற்றவனும், அன்பற்றவனும், எப்பொழுதும் எந்தப்பிராணிகளையும் இம்சிப்பவனும், எவ்வுலகத்துக்கும் பயமுண்டாக்குகிற வனும், மகாபலம்பொருந்தியவனும், சூரனுமான இராவ ணன் வீற்றிருப்பதைச் சூர்ப்பணகை கண்டாள். நல்லா டை புனைந்து, நற்கலனணிந்து, நற்றார் சூடி, கால காலன் உட்கார்ந்திருப்பதுபோல, அரக்கர் மன்னவனும் புலஸ் திய வம்சத்தின் கொழுந்துமான தன் தமையன் இரா வணன் வீற்றிருப்பதைச் சூர்ப்பணகை கண்டாள். மந்தி ரிகள் புடைசூழ, உலகத்தை அழிக்கத் தகுந்த ஆண் மையோடு உட்கார்ந்திருந்த இராவணனைக்கிட்டி மகாத் துமாவாகிய லக்ஷ்மணனால் அங்கபங்கம் பண்ணப்பட்டவ ளான, நினைத்தவிடங்களில் சஞ்சரிக்கும் சூர்ப்பணகை பயத்தால் மெய்பதறி நெருப்புப்பொறி பறக்கின்ற விசால மான கண்களையுடைய இராவணனுக்குத் தான் அடைந்த அங்கபங்கத்தைக் காட்டி இவ்விதக் கொடிய வார்த்தை களைச் சொல்லுவாளாயினள்.

முப்பத்துமூன்றுஞ்சருக்கம்.

இராவணன் தனக்கு வந்த கேட்டை அறியாமலிருந்ததற்காக அவனைச சூர்ப்பணகை கிந்தித்தல்.

சூர்பபணகை இராவணனை இகழ்தல்.

பின்னர், வெகுபரிதாபமான நிலைமையிலிருந்த சூர்ப்பணகை, மந்திரிகள் மத்தியில் உட்கார்ந்திருந்த உலகத்தை அழச்செய்யும் கொடிய பராக்கிரமமுள்ள இராவணனைப்பார்த்து, வெகு கோபத்துடன் பின்வருமாறு சொன்னாள்:—" நீ இஷ்டபபடி எல்லாம் நடந்து, சுகங்களில் ஆழ்ந்து மயக்குற்று, கேட்பவர்கள் ஒருவருமில்லாமல், நினக்குப் பெருங்கேடு வந்துவிட்டதைக் கூட அறிந்துகொள்ளாமல் இருககிறாய். அற்பபோகங்களில் மூழ்கிக் காமத்தில் ஆழ்ந்து அற்பவழியில் நடக்கும் அரசனை அவனுடைய குடிகள், சுடுகாட்டுத் தீயைப் போல, மதிக்கமாட்டார்கள். செய்யவேண்டிய காரியங்களைத் தக்ககாலத்தில் செய்யாத அரசன் தனது நாட்டை அக்காரியங்களுடன் இழந்துவிடுவான். காரியங்களைத் தெரிந்துகொள்ள ஒற்றரை அனுப்பாதவனும், வேண்டிய காலங்களில் குடிகளுக்குத் தரிசனம கொடுக்காதவனும், தன் புத்தியின்றிப் பிறர் புத்திப்படி நடப்பவனுமான அரசனைத் தூரத்தில் இருந்துகொண்டே குடிகள், சேறடைந்த ஆற்றை யானை நீங்குவதுபோல, நீங்கிவிடுவார்கள். தன் புத்தியால் தன் இராச்சியத்தை ரக்ஷிக்காத அரசன் சமுத்திரத்தில் முழுகிய மலைகள்போல் ஒரு பொழுதும் விளங்கமாட்டான். தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள் முதலானவர்களுடைய பகையைச் சம்பாதித்துவைத்துக்கொண்டு, அவர்கள் என்ன செய்கிறார்களென்று ஒற்றர்களால் அறிந்துகொள்ளாமல் விஷயசபல்மே பெரிதாகக்கொண்டிருக்கும் நீ எவ்வாறு அரசனாகுவாய்? ஓ

ராக்ஷச, நீ சிறுபிள்ளைத் தன்மையுள்ளவனும் புத்தி அற்றவனும் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவை களைத் தெரிந்துகொள்ளாதவனுமாய் இருக்கிறாய். ஆயின் நீ எவ்வாறு அரசனாகுவாய்? கொற்றவனே, ஒற்றரும் பொக்கிஷமும் இராசநீதியும் தங்கள் வசமில்லாத அரசர்கள் சாதாரண சனங்களுக் கொப்பாவார்கள். ஒற்றர்களாகின்ற கண்களால் வெகுதூரத்தில் நடக்கும் விஷயங்களை அறிகின்றதனால் அரசர்கள் தீர்க்கதரிசி களென்று சொல்லப்படுகிறார்கள். நமது சுற்றத்தார் ஜனஸ்தானத்தில் மாண்டதை நீ இன்னும் அறிந்துகொள் ளாதபடியால் உனக்குச் சாரணர்கள் இல்லையென்றும், உன்னைச்சுற்றி உட்கார்ந்திருக்கும் மந்திரிகள் சாமான்யர்க ளென்றும் நானெண்ணுகிறேன். இராமனொருவனால் வெகு கொடிய செயல்கள்புரிந்துவந்த பதினாலாயிரம் ராக்ஷசர் களும் கரனும் தூஷணனும் கொல்லப்பட்டார்கள். அன் றியும், அவன் ரிஷிகளுக்கு அபயம் கொடுத்துத் தண்ட காரணியத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கி ஜனஸ்தானத் தை அலைத்துவிட்டான். நீ காமவலையில் சிக்கிக்கொண்டு, மதிமயங்கி, பராதீனனாய், உனக்கு என்னகேடு நேர்ந்துள் ளது என்பதை அறியாமலிருக்கிறாய். கொடியவனாய், லோ பியாய், கள்ளுண்பவனாய், கர்வமடைந்தவனாய், புத்தி யீனனாய் அரசாண்டுவரும் மன்னவனுக்குச் சங்கடம் வந்த காலத்தில் உலகத்தார் உதவிசெய்யார்கள். தன்னைப்பற்றி அதிகமாக எண்ணிக்கொள்ளுகிறவனும், நல்வழியில் நில் லாதவனும், தன்னைப்பற்றிப் பெருமையாகக் கருதுகிற வனும், கோபிக்குங்குணமுள்ளவனுமான அரசனை அவன் சொந்தச்சனங்களே கொன்றுவிடுவார்கள். அவன் சொல் லும் பேச்சை ஒருவரும் கேட்கமாட்டார்கள். அவனைக் கண்டு ஒருவரும் பயப்படமாட்டார்கள். அவன் சீக்கிரம் தனது இராச்சியத்தை இழந்து வறுமை அடைந்து துரும்புக்கொப்பாவான். காய்ந்த கட்டையும் கல்லும்

மண்ணும் ஏதாவது பயன்பட்டாலும் படலாம்; தனது பதவியை இழந்த அரசன் ஒன்றுக்கு முதவான். கட்டிக் கழித்த வஸ்திரம்போலவும், கசங்கிப்போன பூமாலைபோலவும் இராச்சியத்தை இழந்த மன்னன் ஆற்றலுள்ளனாயினும் ஒரு பொருளாக மதிக்கப்படான். ஆனால், வெகு சாக்கிரதையுள்ளவனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், புலன்களை அடக்கினவனாகவும், நன்றியுள்ளவனாகவும், நீதிநெறியில் நடப்பவனாகவும் இருக்கும் அரசன் வெகுகாலம் அரசாளுவான். கண்களை மூடிக்கொண்டு தூங்கினபோதிலும், நீதியாகின்ற கண்களைவிழித்திருப்பவனும் தன்னுடைய கோபங்களின் பலன்களை யாவரும் அறியவைப்பவனுமாகிய அரசன் எல்லாராலும் மதிக்கப்படுகிறான். இராவணா, அரக்கர்களுக்குண்டாகிய நாசத்தை ஒற்றர்களால் அறிந்துகொள்ளாத நீ துற்புத்தியுள்ளவன்; நற்குணங்களொன்றும் இல்லாதவன். பிறரை அவமானம் செய்துகொண்டு, காமத்தால் கவரப்பட்டு, காலமும் இடமுமறிந்து செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாது, குணங்களையும் தோஷங்களையும் பகுத்தறியாதிருக்கும் நீ உனது இராச்சியத்தை இழந்து விரைவில் அழிவடையப்போகிறாய்". இவ்வண்ணம் சூர்ப்பணகை தனது குற்றங்களை எடுத்துரைக்க, அரக்கர் வேந்தனாகிய இராவணன் அவைகளைப்பற்றி நினைத்து, தனது செல்வத்தையும், செருக்கையும், சேனையையும் சீர்தூக்கி, கொஞ்சநேரம் தனக்குள்ளேயே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

முப்பத்துநான்காஞ்சருக்கம்.

இராவணன் சூர்ப்பணகையிடம் இராமரைப்பற்றி விசாரித்தல்.

இவ்வாறு சூர்ப்பணகை சபை நடுவே கொடுஞ்சொற்களைச் சொல்ல, இராவணன் கோபங்கொண்டு, அவளை

நோக்கி "இராமன் என்பவன் யார்? அவன் பராக்கிரமம் என்ன? அவன் உருவம் எப்படிப்பட்டது? அவன்வீரிய மெத்தன்மையது? என்ன காரணத்தால் ஒருவராலும் நெருங்கமுடியாத தண்டகாரணியத்துக்கு அவன் வந்திருக்கிறான்? அவன் எந்த ஆயுதங்களைக் கொண்டு இத்தனை ராக்ஷசர்களையுங் கரதூஷணதிரிசிரர்களையுங் கொன்றான்?" என்று வினவினான். இவ்வாறு அரக்கர் மன்னனை இராவணன் கேட்கச் சூர்ப்பணகை வெகு கோபத்துடன் தான் கண்டபடி இராமருடைய பராக்கிரமத்தைப் பற்றிச் சொல்லத்தொடங்கினாள் :—"தசரதகுமாரனை இராமன் நீண்டகைகளும் விசாலமான கண்களு முடையவன்; மரவுரியு மான்றோலு முடுத்தவன்; மன்மதன்போல் உருவமமைந்தவன். அவன் பொற்பூண் பூண்ட, இந்திரதனுசுபோன்ற தனது வில்லை நாணேற்றி, மகாவிஷமுள்ள சர்ப்பங்களுக்கொப்பான கூர்மையான பாணங்களைத் தொடுக்கிறான். அவன்யுத்தத்தில்வில்லைவளைப்பதை நான் காணவில்லை; சரமாரியால் அரக்கர் சேனை மாண்டு விழுவதையே நான் கண்டேன். கல்மழையால் இந்திரன் பலிதமான பயிர்களை அழிப்பதுபோல, இராமன் ஒருவன் பாதசாரியாக நின்றுகொண்டு பயங்கரமான உருவம் பொருந்திய பதினாலாயிரம் அரக்கர்களையும் தூஷணனுடன் கரனையும் ஒன்றரை முகூர்த்தகாலத்தில் கூரிய பாணங்களால் கொன்றான். அவன் ரிஷிகளுக்கு அபயங் கொடுத்தான்; தண்டகாரணியத்துக்கு க்ஷேமத்தையுண்டாக்கினான். மகாத்துமாவாகிய இராமன் பெண்கொலை பழியெனக்கருதி என்னை அவமானப்படுத்தி உயிர்தப்பி ஓடவிட்டான். அவன் தம்பி வெகு பராக்கிரமமும் அவனுக் கொப்பான சவுரியமுமுள்ளவன்; இராமனிடத்து அதிக அன்பும் பக்தியு முடையவன். அவன் பெயர் லக்ஷ்மணன். அவன் மிக்கவீரன்; குற்றத்தைச் சகியாதவன்; ஒருவராலுஞ்ஜெயி

சூர்ப்பணகை இராமருடைய வலிமையைக் கூறல்.

க்க முடியாதவன்; எல்லாரையும்ஜெயிக்கவல்லவன்; அதிக பராக்கிரமமும் புத்தியும் வலியுமுடையவன்; அவனை இராமனுடைய வலக்கையென்றும், புறத்திற்சஞ்சரிக்கும் உயிர் என்றும் சொல்லலாம். விசாலமான கண்களும், பூரணசந்திரன்போன்ற முகமும் உடைய இராமனுடைய அரியமனைவி அவனுடைய நன்மையையே எப்பொழுதும் நாடுபவள். அழகிய கூந்தலும், அழகிய மூக்கும், அழகிய துடையும் உடைய அந்தத்தையல்தண்டகாரணியத்திற்கு ஒரு தேவதைபோலவும், மற்றொரு லக்ஷ்மிபோலவும் விளங்கிக்கொண் டிருக்கிறாள். பொன்போன்ற மேனியும் சிவந்து உயர்ந்த நகங்களும் உடைய அந்த அழகுடையாள் பெயர் சீதை. அம்மெல்லிய இடையையுடையாள் விதேகராஜனுடைய குமாரி. அவ்வளவு அழகுவாய்ந்த தேவப்பெண்ணையாவது, கந்தர்வப்பெண்ணையாவது, யக்ஷ கன்னியையாவது, கின்னரியையாவது, நான் இவ்வுலகத்தில் கண்டதேயில்லை. எவனுக்குச் சீதை மனைவியோ, எவனைச் சீதை சந்தோஷத்தோடு தழுவுகிறாளோ, அவனுடைய பாக்கியம் இவ்வுலகத்தில் இந்திரனுடைய பாக்கியத்துக்கு மேலானது. அவ்வளவு நல்நடக்கையும், தேகத்தின் வனப்பும், நிகரற்றொளிரும் காந்தியுமுள்ள அவள்தான் நினக்குச் சரியான மனைவி. நீதான் அவளுக்குச் சரியான கணவன். அம்மடந்தையை நின்னுடைய மனைவியாக்க வேண்டுமென்று எடுத்துவர நான் முயன்றேன். வலியபுயங்களையுடையானே, அதற்காகத்தான் கொடிய லக்ஷ்மணன் என்னை இவ்வாறு அங்கபங்கம்செய்தான். பூரண சந்திரனுக்கொப்பான முகமுடைய அச்சீதையைக் கண்டால் அது முதல் மன்மத பாணங்களால் நீவருந்துவாய். அவளை மருவவேண்டுமென்று இஷ்டமிருந்தால் உடனே தானே வெற்றியடையும்பொருட்டு வலக்காலைத் தூக்கிவைத்து நட. காட்டில் வசிக்கும் இராமனைக்

சூர்ப்பணகை சீதையை வர்ணித்தல்.

கொன்று மாண்டொழிந்த அரக்கர்களுக்குத் திருப்திபண்ணிவை. உன்னுடைய கூரிய பாணங்களால் இராமனையும் மகாரதனான லக்ஷ்மணனையுங் கொன்று கணவனையிழந்த சீதையை மணஞ்செய்துகொள். அரக்கர் வேந்தே, நான் சொல்லுவது நின் மனத்திற் கொத்திருந்தால் உடனே நான் சொல்லும்வண்ணம் நட. அவர்கள் வலிமையையும் உன்னுடைய பலத்தையும் சீர்தூக்கிப்பார்த்து அப்பெண்ணைப் பலாத்காரமாகக் கொண்டுவந்துவிடு. அவயவக் குற்றங்கள் ஒன்றுமில்லாத அழகிய சீதையே உனக்கேற்ற மனைவி. இராமன், தனது கொடிய பாணங்களால், ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் எல்லாரையும் வதைத்ததைக்கேட்டும், கரதூஷணர்கள் மாண்டதைக்கண்டும் நீ எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வாறு நடந்துகொள்."

முப்பத்தைந்தாஞ்சருக்கம்.

இராவணன் மறுபடியும் மாரீசனிடம் சென்றது.

இராவணன் சீதையைக்கவரப் புறப்படல்.

சூர்ப்பணகை கூறிய மயிர்க்கூச்செறியும்படியான மொழியைக் கேட்டுத் தான் செய்யவேண்டிய காரியத்தை மந்திரிகளுடன் ஆராய்ந்து இராவணன் புறப்பட்டான். அவன் அக்காரியத்தின் குண தோஷங்களையும், அதற்குச் செய்யவேண்டிய முயற்சியையயும், அதன் பலாபலத்தையும்குறித்துத்தனக்குள்ளேயே யோசித்து, அதை இப்படித் தான் முடிக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, தனதுபுத்தியை ஒரு நிலையில் நிறுத்தி, அதன்மேல் தனது வாகனசாலைக்குப் போயினான். இரகசியமாக இராவணன் இரதசாலையுள் புகுந்து "சீக்கிரம் இரதத்தைக் கட்டு" என்று சாரதிக்குக் கட்டளையிட்டான். அவ்வாறு

கட்டளையிடப்பட்ட சாரதி உடனே அவன் காட்டின இரதத்தைப் பூட்டினன். தனதிஷ்டப்படி சஞ்சரிப்பதும், பொன்னால் செய்யப்பட்டதும், இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும், பிசாசுபோன்ற முகங்களையுடைய பொற்கலனணிந்த கோவேறுகழுதைகள் பூட்டப்பட்டதும், மேகத்தின் முழக்கத்துக்கொப்பான முழக்கத்தை உடையதுமான அந்த இரதத்தில் ஏறி இராவணன் சமுத்திரக்கரையை நோக்கிச் சென்றான். வெண்சாமரம் இரட்ட, வெண்குடை நிழற்ற, பத்தரைமாற்றுத்தங்கத்தால்செய்யப்பட்ட ஆபரணங்களை வைடூரிய மணியின் நிறத்துக்கொப்பான தனது மேனியில் அணிந்து, அழகான ஆடைதரித்து, பத்துத்தலைகளையும் இருபது கைகளையுமுடையவனும் தேவ சத்துருவும் ரிஷிகாதகனும் பெரிய சிகரங்களையுடைய மலையரசன் போன்றவனுமான அரக்கர் மன்னவன், இஷ்டப்படி செல்லும் இரதமேறி, மின்னல்களோடும் கொக்குக்களோடும் ஆகாசத்தில் விளங்கும் மேகம்போல், தோற்றினன். அதிவீரனை இராவணன் தான் போகும் வழியில் சமுத்திரக்கரையோரமாகவிருந்த மலைகளையும், பூத்துக்காய்த்து நிற்கும் ஆயிரக்கணக்கான மரங்களையும, குளிர்ந்த நீர் நிரம்பிய தாமரை ஓடைகளையும், யாகவேதிகளையுடைய அநேக ஆச்சிரமங்களையும, வாழைத்தோட்டங்கள், துவரங்கொல்லைகள், தென்னந்தோப்புகள், ஆச்சா, பனை, தமாலம் முதலான பல பூத்தமரங்களடர்ந்த காடுகள், சோலைகள் முதலியவைகளையும், ஆயிரக்கணக்கான நாகர்கள், சுபர்ணர்கள், கந்தாவர்கள், கின்னரர்களையும், கர்ப்பத்திலிருந்து பிறவாத வைகானசர்கள, மஷகோத்திரத்தில் பிறந்த ரிஷிகள், வாலகில்லியர்கள், சூரியகிரணங்களை உணவாகக்கொண்ட மரீசிபர்கள், தத்துவ நிர்ணயிகளாகிய ரிஷிகள், பரமரிஷிகள், தங்களாசைகளை அடக்கிய ரிஷிகள், சித்தர்

இராவணன சென்றவழியின வர்ணனை.

கள், சாரணர்கள் முதலியவர்கள் நிரம்பியமுனிவராச்சிரமங் களையும், நகைகளையும் மாலைகளையும் அணிந்தவர்களும், திவ்யமான அழகையுடையவர்களும், ஜலக்கிரீடையையும் ரதியையும் நன்றாக அறிந்தவர்களுமான ஆயிரம் அப்ஸர ஸ்திரீகள் நிரம்பிய இடங்களையும், வெகு பாக்கியசாலிக ளான தேவப்பெண்கள் சூழ்ந்துநிற்கும் இடங்களையும், அமிர்தத்தைப் புசிக்கும் தேவர்களும் தானவர்களும் உலாவும் ஸ்தலங்களையும், அன்னங்கள், கிரௌஞ்சங்கள், நீர்க்கோழிகள், சாரசங்கள் முதலிய பறவைகள் ஒலிக்கும் நீர்நிலைகளையும், வைடூரியக் கற்களையுடைய அழகான இடங் களையும், மனோகரமான் சமுத்திரத்தின் தோற்றத்தை யும், வெண்மை நிறமுடையனவும், விசாலமுள்ளனவும், மாலைகள் கட்டப்பட்டனவும், வாத்தியங்கள் ஒலிப்பனவு மான விமானங்களையும், அவைகளிலேறித் தவத்தால் உலகங்களெல்லாவற்றையும் வென்று தங்களிஷ்டப்படி சஞ்சரிக்கும் கந்தர்வர்களையும், அப்சரஸ்திரீகணங்களையும் பார்த்தான். தன் வேரிலிருந்து பெருங்காயம் என்கிற பிசி னைக்கொடுக்கும் மூலம் என்றசெடியடர்ந்த வனங்களையும், ஆயிரக்கணக்கான சந்தனக்காக்களையும், மிக்க மணங்கமழும் சோலைகளையும், அகிலடர்ந்த சிறு காடுகளையும், பெருங் காடுகளையும், வால்மிளகு, ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் நிரம்பிய கானகங்களையும், தமால மலர்களை யும், மிளகுகொடிகளின் புதர்களையும், கரையோரத்தில் உலர்ந்துகொண்டிருந்த நன்முத்துக் குவியல்களையும், சங் கக் குவால்களையும், பவளத்தின் போர்களையும், தங்கமலை களையும், வெள்ளிராசிகளையும், அழகானமலையருவிகளையும், தெளிவான ஓடைகளையும், தனதானியங்கள், உத்தமிகள், இரத்தினங்கள், யானை குதிரை முதலியவைகள் நிறைந்த நகரங்களையும் பார்த்துக்கொண்டு அரக்கர்மன்னன் சென் றான். அவ்வாறு அவன் சமுத்திரக்கரையோரமாகச் செல் லுகையில் சமுத்திரத்துக்குச் சமீபத்தில் சுகமான இளங்

காற்று வீசப்பெற்றுத் தேவலோகம்போல் விளங்கும் ஓர முகிய சமதரையைக் கண்டான். அங்கே அவன் நான்குபக் கங்களிலும் முநிவர்கள் சூழ மேகம்போல் விளங்கும் ஆல மரமொன்றைக் கண்ணுற்ருன். அதனுடைய கிளைகள் அதைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் நூறுயோசனைதூரம் பரவி நின்றன. அந்தக் கிளை ஒன்றில் முன் ஞெருகாலத்தில் கருடன் தான் புசிப்ப தற்காக ஒரு பெரிய யானையையும் ஆமை யையும் எடுத்துக்கொண்டு வந்துட்கார்ந் தது. அங்ஙனம் உட்கார்ந்தபொழுது அதன் பாரத்தைத் தாங்கமுடியாமல் இலைகள் செறிந்த அக்கிளை படபட வெ ன்று முறிந்தது. அக்கிளையின்கீழ் வைகானசர்கள், மஷ கோத்திரத்திற்பிறந்தரிஷிகள், வாலகில்லியர்கள், சூரிய கிர ணங்களைப்புசிக்கும் மரீசிபர்கள், அஜர்கள், புகையைக்குடிக் கும் ரிஷிகள் முதலிய அநேக முநிவர்கள் வசித்துக்கொண் டிருந்தார்கள். கருடன் அம்முநிவர்கள்மேல் தயைகூர்ந்து, அவ்வாறு முறிந்த கிளையைக் கீழேவிழவிடாமல், நூறு யோசனை நீளம் உடையதாக விருந்தபோதிலும் அதைத் தான் முன்னரே கொண்டுவந்த யானை ஆமைகளோடு சேர்த்து ஒற்றைக்காலால் தூக்கிக்கொண்டு, வெகு வேக மாக ஆகாயத்தில் பறந்து, அவ்விரு பிராணிகளுடைய மாமிசத்தையும் புசித்துவிட்டு, மரக்கிளையை வேடர் களிருந்த நாடொன்றில் எறிந்து, அதை யழித்து, முநி வர்களைக் காப்பாற்றினதற்காக வெகு சந்தோஷமடைந் தது. அந்தச் சந்தோஷத்தால் அது முன்னரில் இரு மடங்கு பராக்கிரமம் அடைந்து அமிர்தத்தைக் கவர எண்ணிற்று. பின்பு நன்ருக இருப்புக் கம்பிகள்போட்டு இரத்தினத்தால் கட்டப்பட்ட வீட்டில் இந்திரன் இரகசி யமாக வைத்திருந்த அமிர்தத்தை அது அவ்விருப்புக் கம் பிகளை முறித்து இரத்தினச்சுவரைப் பிளந்தெறிந்துவிட் டுத் தூக்கிக்கொண்டு போயிற்று. அவ்விதமாகக் கருட

கருடன் அமிர்தம் கவர்ந்த கதை.

ஞல் அடையாளம் செய்யப்பட்டதும் அநேக மக ரிஷிகளின் கூட்டங்கள் வாசம்பண்ணுவதுமான சுபத் திரம் என்ற பெயருள்ள பேராலமரத்தைக் குபேர னுக்குப் பின்பிறந்த இராவணன் கண்டான். பின்பு அவன் சமுத்திரத்தைத் தாண்டி அக்கரைசேர்ந்து அங்கு ஜனசஞ்சாரமில்லாத அழகான அரணியத்தின் ஒருபக்கத்தில் ஓர் ஆச்சிரமத்தை அடைந்தான். அவ்விடத்தில் மான்தோல் புனைந்து, சடைமுடி தரித்து, மரவுரி உடுத்து, உணவுடியைச் சுருக்கி இருந்த மாரீசன் என்ற ராக்ஷசனை அவன் கண்டான். மாரீசன் மனிதர்களால் செய்யமுடியாத உபசாரங்களைச் செய்து அரக்கராஜனை ஏற்றுககொணடான. அவன் ஆகாரம் தீர்த்தம் முதலியவைகளைத் தானே இராவணனுக்குக் கொண்டுவந்து கொடுத்து அவனைப்பார்த்துப் பின்வரும் பொருள் பொருந்திய சொற்களால் "ராக்ஷசேந்திரா, இலங்கையில் எல்லாம் க்ஷேமமா. யாதுநிமித்தம் நீ இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் இங்கே திரும்பி வந்தனை?" என்று வினவினன். இவ்வாறு மாரீசன் வினவ, அவனைப் பார்த்து, பேசுவதில சமர்த்தனான மிக்கவலியுள்ள இராவணன் சொல்லலுற்றான்.

மாரீசன்.

முப்பத்தாறுஞ்சருக்கம்.

இராவணன் மாரீசனிடம் தனக்குநேரிட்ட கஷ்டத்தையும், சீதையை அபகரிக்கவேண்டுமென்று தான்கொண்ட எண்ணத்தையும் எடுத்துச சொல்லல.

"ஓ மாரீசா, நான் சொல்லுவதைக் கேள். எனக்கு மிகுந்த துக்கமொன்று நேர்ந்திருக்கிறது. துக்கமடைந்தவனை அத்துக்கத்திலிருந்து நீக்கிவைக்க நீதான் வல்லவன். ஜனஸ்தானத்தில் என் தம்பி கரனும், மகாபலமுள்ள

இராவணன மாரீசனை உதவி செய்யவேண்டல்.

தூஷணனும், எனது தங்கை சூர்ப்பணகையும் இருந்தது உனக்குத் தெரியுமே. மனிதர் மாமிசத்தைப்புசிக்கும்மகாபலம்பொருந்திய திரிசிரனும் அங்கிருந்தான். இன்னும் அநேக வீரர்களும், போரில் இச்சையுடைய அரக்கர்களும் எனது கட்டளையால் அவ்விடத்தில் சுகமாக வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அவ்வரணியத்தில் தங்கள் இயற்கைக் கொத்தபடி தர்மம் செய்பவர்களை வருத்திக்கொண்டிருந்தார்கள. இவ்வண்ணம் பதினாலாயிரம் அரக்கர்கள் கொடிய செய்கைகளைப்புரிந்துகொண்டு கரனுடைய இஷ்டப்பிரகாரம் நடந்துகொண்டு யுத்தத்தில் மிகத் தேர்ந்தவர்களாய் அவ்விடத்தில் வசித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஜனஸ்தானத்தில் பல ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கரனை முன்னிட்டு இராமனைப் போரில் எதிர்த்தார்கள். இராமன் அதைக் கண்டு கோபங்கொண்டு அவர்களை ஒன்றுங் கடிந்துபேசாமல் வில்லில் அம்புகளைச்சந்தித்து விடுத்தான். வெகு பலம் பொருந்திய அப்பதினாலாயிரம் அரக்கர்களும் பாதசாரியாய் யுத்தம்செய்த மனுஷனாகிய இராமன் ஒருவனால் கொல்லப்பட்டார்கள். போரில் கரனும் மாண்டான்; தூஷணனும் மாய்ந்தான்; திரிசிரனும் மடிந்தான். தண்டகாரணியமும் பயம் நீங்கியது. கோபமடைந்த தனது தந்தையால் மனைவியுடன் காட்டுக்கோட்டப்பட்ட அற்ப க்ஷத்திரியனும், ஆயுளிழந்தவனுமான இராமன் அந்தப் பெரிய அரக்கர் சேனையை அழித்தான். அவன் கெட்ட நடைக்காரன்; வெகு குரூரமானவன்; பொல்லாதவன்; புத்தியீனன்; அற்பன்; தன் புலன்களை அடக்காதவன்; தருமமற்றவன்; பாவி; எப்பொழுதும் எல்லாப்பிராணிகளையும் இம்சிப்பவன். அவன் தன்பலத்தின் செருக்கால் கொஞ்சமேனும் பகையில்லாத எனது தங்கையின் காதுகளையும் மூக்கையும் அறுத்து அவளுடைய உருவத்தைக் குலைத்தான்.

தேவப்பெண்ணுக் கொப்பான அவன் மனைவி சீதையை நான் ஜனஸ்தானத்திலிருந்து எடுத்துவரப்போகிறேன். அவ்விஷயத்தில் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும். மகாபலம் பொருந்திய மாரீசா, நீ ஒருவன்மட்டும் எனக்கு உதவியாக என்பக்கத்தில் நின்றால் கும்பகர்ணன் முதலான எனது சகோதரர்கள் தேவர்களுடன் கலந்து என்னைப் போரில் எதிர்த்தபோதிலும் நான் அவர்களை லக்ஷ்யம் பண்ணமாட்டேன். ஆகையால், நீ எனக்கு உதவிசெய்யவேண்டும். நீ வெகுவல்லவன். யுத்தத்திலும், பராக்கிரமத்திலும், செருக்கிலும், உனக்கொப்பானவர்கள் ஒருவருமில்லை. நீயோ பலவித உபாயங்களை அறிந்தவன்; பெரிய சூரன்; சகல மாயைகளிலும் தேர்ந்தவன். இக்காரணத்தைக் கொண்டுதான் நான் இப்பொழுது உன்னிடம் வந்தேன். நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி இன்னதென்பதை நான் சொல்லுகிறேன் கேள். நீ அழகான வெள்ளிப் புள்ளிகள் அமைந்த ஒருபொன்மானாக உருவமெடுக்கவேண்டும். அவ்வுருவுடன் இராமனாச்சிரமம் சென்று, நீ சீதையின் முன்னர் உலாவவேண்டும். அவ்வாறு உலாவும் உன்னைச் சீதை உண்மையாகவே ஒருமானாக எண்ணித் தனது கணவனையும் அவன் தம்பி லக்ஷ்மணனையும் பார்த்து உன்னைப் பிடித்துக்கொடுக்கும்படிவேண்டுவாள். அவ்விருவர்களும் உன்னைப்பிடிக்க ஆச்சிரமத்தைவிட்டுப் புறப்பட்டபின்பு, ஒருவித இடையூறுமின்றி, சந்திரனது காந்தியை இராகு விழுங்குவதுபோல், நான் சீதையை எடுத்துச்செல்வேன். தனதுமனைவி போய்விட்ட துயரத்தால் வருத்தமடைந்த இராமனை, நான் காரியம் நிறைவேறப்பெற்றுச் சந்தோஷமடைந்த மனத்தை உடையவனாய், வெகு எளிதாக வதைசெய்வேன்.''

இவ்வண்ணம் இராவணன்சொன்ன சொல்லைக்கேட்டு மகாத்மாவாகிய மாரீசன் முகம் சோர்ந்து பயத்தால் நடுங்

இராவணன் எண்ணத்தைக் கேட்டு மாரீசன் பயந்தது.

கிறான். உலர்ந்துபோன தனது உதடுகளை அவன் நாவினால் நக்கிக்கொண்டு, கண்களை இமைகொட்டாமல் விழித்து, இறந்தவன் போலாகி, மிக்க துயரமடைந்து, இராவணனை உற்றுப்பார்த்தான். இராமருடையசக்தியை முன்னரே அரணியத்தில் அறிந்தவனாதலின் மாரீசன், மனம் நடுங்கித் துயரப்பட்டுக்கொண்டு, இராவணனைப் பார்த்துக் கைகூப்பி, அவனுக்கும் தனக்கும் நன்மையை உண்டாக்கக்கூடிய உண்மையான வார்த்தைகளைச் சொல்லுவானாயினன்.

முப்பத்தேழாஞ்சருக்கம்.

இராமருடைய விரோதம் வேண்டாமென்று மாரீசன் இராவணனை வேண்டல்.

அவ்வாறு அரக்கர் மன்னவன் சொன்ன சொல்லை வெகு புத்திமானும் விஷயங்களை நன்றாக அறிந்தவனுமான மாரீசன் கேட்டு அவனைப்பார்த்து "வேந்தே, இனிமையாகப பேசுகின்றவர்கள் எங்கும் உளர்; கேட்கும்பொழுது அப்பிரியமாய்த் தோன்றினபோதிலும் பிறகு மிகுந்த நன்மையைப் பயக்கும்படியான வார்த்தைகளைப் பேசுகிறவர்களும கேட்பவர்களும் அரியர். ஒற்றர்களில்லாமையாலும், சாபல்லியத்தாலும், இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பான மகாவீரியமும் மகாகுணமும் பொருந்திய இராமனை நீ உண்மையாக அறிந்துகொள்ளவில்லை. ஐயனே, இராமன் கோபங்கொண்டு இவ்வுலகத்தில் அரக்கர்கள் இல்லையாம்படிசெய்யாமலிருந்தால்,சீதை பிறந்தது உனது நாசத்திற்கு அல்லாமலிருந்தால், சீதையின்காரணத்தால் எனக்கும் ஒருவிதகேடும் உண்டாகாம

மாரீசன் இராவணனுக்குப புத்தி கூறல.

லிருந்தால், புத்திசொல்லுகிறவர்களில்லாமல் இஷ்டப்படி நடப்பவனும் நீதியற்றவனுமான உன்னை அரசனாகப்பெற்ற இலங்கை உன்னுடனும் மற்ற அரக்கர்களுடனும் அழியாமலிருந்தால், அதுபோதும். உன்னைப்போன்றகொடிய செய்கையும் துராலோசனையுமுள்ள அரசன், கெட்டபுத்தியால், தனக்கும் தன் பந்துஜனத்திற்கும் தன் தேசத்திற்கும் அழிவை உண்டுபண்ணுகிறான். இராமன் தனது தந்தையால் கைவிடப்பட்டவனல்லன்; ஒருபொழுதும் மரியாதை தவறுபவனுமல்லன். அவன் லோபியு மல்லன்; கொடிய செய்கையுள்ளவனுமல்லன்; க்ஷத்திரியப்பதடியுமல்லன்; தருமம்முதலிய நற்குணங்கள் இல்லாதவனுமல்லன். அவன் குரூரமுள்ளவனல்லன்; பிராணிகளை இம்சிக்கிறவனல்லன். அவன் எப்பொழுதும் தாயாருடைய மனத்தைக் களிக்கச் செய்பவன். சத்தியத்திற்கஞ்சிய தனது தந்தை கைகேயியால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து "நீங்கள் பயப்படவேண்டாம், உங்கள் சத்தியத்தை நான் நிலைநிறுத்தி வைக்கிறேன்'' என்று தன்தந்தைக்குத் தைரியம்சொல்லித் தான் காட்டுக்குவந்தனன். அவன் தனதுதாய்கைகேயியின்கோரிக்கையையும் தனது தந்தை தசரதரின் சத்தியத்தையும் நிறைவேற்றும் பொருட்டே இராச்சியத்தையும்இராஜபோகங்களையும் துறந்து தண்டகாரணியத்திற்குவந்தான். ஐயனே, இராமன்கொடியனுமல்லன்; மதியற்றவனுமல்லன்; புலன்களை அடக்காதவனுமல்லன். நீ அவனைப்பற்றி இவ்வாறு கொடுஞ்சொல் சொல்லுவது தகாது. இராமன் தருமத்தின் அவதாரம். அவன் வெளுசாது; உண்மையான பராக்கிரமமுள்ளவன். இந்திரன் தேவர்களுக்கு இறைவனுமாறுபோல, அவன் இவ்வுலகத்திற்கெல்லாம் இறைவன். பதிவிரதாதருமத்தால் பாதுகாக்கப்பட்டு விளங்கும் சீதையை, அக்கினியினிடமிருந்து அதின் ஒளியை அபகரிக்க எண்ணுகிறவன்போல,

இராமனை இகழவேண்டாம் எனல்.

பலாத்காரமாக இராமனிடமிருந்து எடுத்தோட நீ எவ்வாறு எண்ணுகிறாய்? பாணங்களாகிய ஜ்வாலையையும், விற்களும் கத்திகளுமாகிய விறகுகளையும் உடைய, அணுகமுடியாத இராமாக்கினியை நீபரபரப்புடன்நெருங்குவது தவறு. வில் என்ற பெருவாயால் பாணமென்னும் அணுகமுடியாத் தீயைக் கக்கிக்கொண்டு, தனதுகையில்வில்லையும் பாசம்போல் வைத்துக்கொண்டு நின்று, சத்துரு சைநியங்களை அழிக்கும் இராமனாகிய காலனை, நீ உன்னுடைய ராச்சியத்தையும் சுகத்தையும் முழுதும் விட்டுவிட்டு, உயிர் மேல் வைத்திருக்கும் அன்பையும் ஒழித்தவனாகி, நெருங்குவது கூடாது. அவனது பராக்கிரமம் ஒப்பிடமுடியாதது. அவன் மனைவி சீதை அவனுடைய வில்லால் பாதுகாக்கப்பட்டுவருகிறாள். அவளைக்காட்டிலிருந்து எடுத்துவர உன்னால் ஒருபொழுதும் முடியாது. அப்பெண்மணி சிங்கத்தின் பிடர்போன்ற பிடரையுடைய மானிடசிங்கமாகிய இராமனுடைய உயிருக்குயிரான மனைவி; எப்பொழுதும் அவனிடம் நீங்காத அன்புடையவள். வெகு பராக்கிரமசாலியாகிய இராமனுடையமனைவியை, கொழுந்துவிட்டெரியும் தீயின் ஒளியை எடுத்தோடக்கருதுபவன்போல், நீ எடுத்தோட எண்ணுவது ஒருபொழுதும்முடியாத காரியம். அரக்கர்வேந்தே, இந்தப் பயனற்ற வீண்காரியத்தில் நீ முயற்சிசெய்து என்ன பிரயோசனம்? போரில் அவனை நீகாணுமளவே உன்னுடையவாழ்வு. நீ உன்னுடையபிராணன்மேலும், சுகங்களின்மேலும், எய்தற்கரிய இராச்சியத்தின்மேலும் ஆசை உள்ளவனாய், அவைகளை வெகுகாலம் அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தால், இராமனுடைய பகையை ஒருகாலும் தேடாதே. விபீஷணன் முதலான தருமமறிந்த மந்திரிகளுடன் கூடி யோசித்து, இக்காரியத்தின் நன்மைதீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, உன்னுடையபலத்தையும் இராமனுடைய பலத்

சீதையைக் கவரவேண்டாம் எனல்.

தையும் ஆராய்ந்து, பின்பு தக்கபடி நட. அக்கோசலதேசத்து இராஜகுமாரனைப் போரில் எதிர்த்துநிற்க ஒருபொழுதும் உன்னால் முடியாதென்று நான் எண்ணுகிறேன். நிசாசரேந்திரா, நான் உனக்கு நன்மையாயும் யுக்தமாயும் மீளவும் சொல்லப்போகிற சொல்லைக் கேள்" என்றான்.

முப்பத்தெட்டாஞ்சருக்கம்.

மாரீசன் தான் இராமரிடம் பட்ட அவஸ்தையை இராவணனுக்குச் சொல்லல்.

"நான் முன்னொருகாலத்தில் ஆயிரம் யானைகளின் பலமுடைய மலைக்கொப்பான உருவுடன் இவ்வுலகமெங்கும் சஞ்சரித்தேன். அப்பொழுது நான் முகில்போல் கரிய நிறமுடையவனாய், காதில் தங்கக்குண்டலங்கள் அணிந்து, தலையில் கிரீடம் புனைந்து, கையில் பரிகையாயுதம் ஏந்தி, உலகத்துக்கெல்லாம் பெரும் பயத்தை உண்டுபண்ணிக்கொண்டு, ரிஷிகளின் மாமிசத்தைப் புசித்து, தண்டகாரணியத்தில் திரிந்துகொண்டிருந்தேன். அப்படி நானிருந்தகாலத்தில் என்னைக் கண்டு விசுவாமித்திரமுனிவர் பயந்து தசரதரிடம் சென்று அவரைப்பார்த்து "வேந்தே, மாரீசனுக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன் ஆகையால், நான் யக்ஞம் பண்ணுங்காலத்தில் இராமன் வந்து என்னைப் பாதுகாக்கவேண்டும்" என்றார். இவ்விதமாக அம்முனிவர்சொல்லத் தருமாத்துமாவாகிய தசரதர் அவரைப்பார்த்து "இராமன் சிறு பையன்; பன்னிரண்டுவயதுள்ளவன்; ஆயுதப்பயிற்சியில் நன்றாய்த் தேர்ந்தவனல்லன். தாங்கள் அருள்செய்தால் நானே என்து சதுரங்கசேனைகளோடும் வந்து, ஓ முனிசிரேஷ்டரே, தங்கள் சத்துருக்களாகிய அரக்கர்களை வதைக்கி

மாரீசன் விசுவாமித்திரர் யாகத்தில் இராமனை எதிர்த்தது.

றேன்" என்று மறுமொழி கூறினர். விசுவாமித்திரர் அது கேட்டு அரசனைநோக்கி "நீர் போரில் தேவர்களுக்கு உதவியாக இருந்திருக்கிறீர்; உம்மால் போரில் செய்யப்பட்ட ஆச்சரியமானகாரியங்கள் மூவுலகங்களுக்கும் தெரிந்திருக்கின்றன. ஆயினும் அரக்கர்களை வதைக்க இராமனையன்றி மற்றொருவரால் முடியாது. ஆகையால், அரசனே உம்முடைய சேனைகள் இங்கேயே இருக்கட்டும். இராமன், சிறுகுழந்தையாக இருப்பினும், அரக்கர்களை வதைக்க வல்லவன். நான் இராமனையே அழைத்துப்போகிறேன். உமக்கு க்ஷேமமுண்டாவதாக" என்று சொல்லி, இராமனை அழைத்துக்கொண்டு சந்தோஷமாகத் தமது ஆச்சிரமம் சென்றார். அவர் அதன்மேல் தீக்ஷை செய்துகொண்டு தண்டகாரணியத்தில் யக்ஞம்பண்ண உட்கார்ந்தார். அவருக்கு அருகில் இராமன் தனது வில்லைக் கையிற் பிடித்து நின்றான். அவன் யௌவனபருவத்தை முற்றும் அடையாதவனும் தாமரை இதழ்போன்ற இரண்டு கண்களை உடையவனுமாய், ஒற்றை வஸ்திரம் உடுத்து, கழுத்தில் ஒருபொன்மாலை அணிந்து, கையில் வில்லைப்பிடித்து, தேககாந்தியால் தண்டகாரணிய முழுவதையும் திகழச்செய்து, அப்பொழுது உதயமான இளஞ்சந்திரன்போல விளங்கினான். அப்போது நான் மேகம்போன்ற எனது கரிய தேகத்துடன் சுவர்ண குண்டலங்களை அணிந்துகொண்டு, வெகு பலசாலி என்றும் வெகு வரங்களை பெற்றவன் என்றும் செருக்கடைந்து, அவ்வாச்சிரமத்துக்குச்சென்றேன். என்னைக் கண்ட நிமிஷத்தில் அவன் கொஞ்சமேனும் கலக்கமின்றி வில்லை நாணேற்றினான்.

மாரீசன் கடலில் தள்ளப்பட்டது.

நான் அவனைச் சிறுபிள்ளை என்று எனது புத்தியின்மையால் அலக்ஷியமாய் எண்ணி வெகு வேகமாக விசுவாமித்திர முனிவருடைய வேதிகையை நோக்கிச்சென்றேன். அப்போது இராமன் சத்துருக்களை வதைக்கும் வல்லமையுள்ள கூரிய பாண

மொன்றை எய்து என்னைத்தூக்கி நூறுயோசனை தூரத்துக்கு அப்பால் சமுத்திரத்தில் எறிந்தனன். அவன் அப்பொழுது என்னைக் கொல்லக் கருதவில்லை யாகையால், நான் பிழைத்தேன். ஆனால், அவன் விடுத்த பாணங்கள் என்னைப் பிரக்ஞையற்றவனாகப்பண்ணி, ஆழமான சமுத்திர ஜலத்தில் தள்ளின. பிறகு, வெகுநேரங் கழிந்து, நான் நல்லறிவடைந்து இலங்கைவந்து சேர்ந்தேன். நான் இவ்வாறு பிழைத்தேனாயினும் எனக்கு உதவியாகவந்த அரக்கர்களெல்லாம் ஆயுதப்பயிற்சி இல்லாத சிறுபிள்ளையாகிய இராமனால் சிறிதும் சிரமமில்லாமல் அப்போதே வதை செய்யப்பட்டார்கள். இதனாலே,நான்,இராவணா, நான் உன்னைத் தடுக்கிறேன். இராமனுடன் போர் புரியக் கருதுவாயானால், நீ வெகு சங்கடங்கள்பட்டு நாசமடைவாய். எப்பொழுதும் அநேகவிதமான கிரீடைகளையும் ரதிகளையும செய்துகொண்டு கூட்டமாக விழாக்கொண்டு சுகமாகவிருக்கும் அரக்கர்களுக்கு வீணாகக் கெடுதியை விளைவிப்பாய். சீதையின் நிமித்தம், மாடமாளிகைகளை உடையதாகி, அநேகவித இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் இலங்கைக்கும் அழிவு வருவிப்பாய். கொடியவர்களுடன் வசிக்கும் நல்லவர்கள், தாங்கள் பாபங்கள் செய்யாவிடினும், அக்கொடியவர்களுடைய பாவங்களால், பாம்புவாழும் மடுவிலுள்ள மீன்கள்போல, அழிந்துவிடுவார்கள். நல்லசந்தனம் பூசி, அழகிய ஆபரணம் அணிந்து விளங்கும் அரக்கர்கள் உன்னுடைய பாவத்தால் மாண்டு பூமியில் விழுவதை நீ காணுவாய். அவர்கள் தஞ்சமற்றவர்களாய், சிலர் மனைவிகளோடும், சிலர் மனைவிகளை இழந்து தனித்தவர்களாயும், பத்துத் திக்கிலும் ஓடுவார்கள். இலங்கை பாணங்களால் மூடுண்டு, தீமண்டி, வீடுகளெல்லாம் நீறாகிப் பாழாவதை நீ காணுவாய். பிறர்மனைவியைக் கவர்வதைவிடப் பெரும்

இராவணனை இராமனுடன் போர்புரியவேண்டாமெனல்.

பாவம் வேறொன்றில்லை. அரசனே, உனக்கோ ஆயிரம் மனைவிமார்கள் இருக்கிறார்கள். உன்மனைவிகளோடு நீ சந்தோஷமாக இருந்துகொண்டு உன் குலத்தையும், உன்னுடைய மரியாதையையும், சம்பத்தையும், நாட்டையும், உன்னால் விரும்பப்படும் உயிரையும் பாதுகாத்துக்கொள். நீ நின்மனைவிமார்களோடும் தோழர்களோடும் வெகுகாலம் வாழவேண்டுமென்று விரும்பினால் இராமனுடைய பகையைத் தேடாதே. உனக்கு மிகவும் வேண்டிய அன்பனான நான் இவ்வாறு பெரிதும் தடுப்பதைக் கேளாமல் பலாத்காரமாகச் சீதையைத் தொடுவாயானால், நீ உனது பலத்தை இழந்து, உனது பந்துக்களுடன் இராமனுடைய பாணங்களால் மாய்ந்து, யமனுடைய மாளிகைக்குப்போவது நிச்சயம்.''

முப்பத்தொன்பதாஞ்சருக்கம்.

இராமனைத் தான் மற்றொருதரம் எதிர்த்து உயிர்பிழைத்ததையும் அன்றுமுதல அவர் பயத்தால் யோகியானதையும் மாரீசன் இராவணனிடம் சொல்லல்.

"இவ்வாறு வெகு கஷ்டப்பட்டு அப்போரில் நான் இராமனிடமிருந்து தப்பிப்பிழைத்தேன். பின்பு நடந்ததைச் சொல்லுகிறேன், பதிலுத்தரம் சொல்லாமல் கேள். முன்பு இராமனால் அலக்ஷ்யமாய் விடப்பட்டபடியால், பின்னர் நான் செருக்குக் கொண்டு, வேறு இரண்டு அரக்கர்களுடன் உருமாறித் தண்டகாரணியம் புகுந்தேன். தீக்கொப்பான நாவும், கூர்மையான கோரப்பல்லும் உடைய பெரிய மான் வடிவமெடுத்து, முனிவர்களுடைய மாமிசத்தைப் புசித்துக்கொண்டு, நான் அக்காட்டில் திரிந்தேன். ரிஷிகள் அக்கினி

மாரீசன் தண்டகாரணியத்தில் இராமனை எதிர்த்தது.

ஹோத்திரம் செய்யுமிடங்களிலும், ஸ்நானம்பண்ணும் துறைகளிலும், பூசைக் குரித்தான விருக்ஷங்களுள்ள இடங்களிலும் சென்று, முனிவர்களைக்கொன்று, அவர்களுடைய இரத்தத்தைக் குடித்து, மாமிசத்தைப் புசித்துத் தவத்திற் கிடையூறு செய்தேன். நான் பெரிய கோரமான உருவமுடையவனாகி, வனத்திலுள்ளவர்கள் என்னைக்கண்டு நடுங்கும்படி நடந்தேன். இரத்தவெறி கொண்டு இப்படி நான் தவத்தைக் கெடுத்துக்கொண்டு தண்டகாரணியத்தில் திரியுங்காலத்தில் ஒருநாள், தவவேடம் பூண்டு தருமத்தை வளர்த்துக்கொண்டு வந்த இராமனையும், வெகு பாக்கியசாலியான சீதையையும், மகாரதனான லக்ஷ்மணனையும் கண்டேன். உண்டியைக் குறைத்துக்கொண்டு, எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை புரிந்துவந்த இராமனுடைய பலத்தை நான் முன்போலிருக்கும் என்று கருதாமல், என் புத்தியின்மையால் அவனைத் தபசி என்று அலக்ஷியம்பண்ணி, அவனிடம் முன்பு நான் வைத்திருந்த பகைமையால் வெகு கோபங்கொண்டு, எனது கூரான கொம்பினால் அவனைக்கொன்றுவிடவேண்டுமென்று, மானுருவத்தோடு போய் எதிர்த்தேன். அவன் தனது வில்லை வளைத்துச் சத்துருக்களை வதைக்கும் வல்லமை பொருந்திய மூன்று பாணங்களை விடுத்தான். அவை அவனுடைய வில்லிலிருந்து கருடனுக்கொப்பான வேகத்துடன் கிளம்பின. இரத்தத்தைத் தங்களுக்கு உணவாகக்கொண்ட, கொஞ்சம் வளைந்த முனைகளையுடைய, அப்பாணங்கள் வச்சிராயுதத்துக் கொப்பாக எங்கள் மூவர்களையும் நாடி வெகு வேகமாக வந்தன. முன்னரே இராமனுடைய பாணத்தின் பலத்தை அறிந்தவனாகையால் நான் ஓடித் தப்பினேன். மற்றை இருவர்களும் அப்பாணத்தால் மாண்டார்கள். இராமனுடைய பாணத்தால் மாளாமல் நான் எவ்வாறோ உயிர்

மாரீசன் உயிர் தப்பி ஓடினது.

தப்பி, கெட்ட செய்கைகளைவிட்டு, தவவேடம்பூண்டு, அன்றுமுதல் இவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டு வசிக்கின்றேன். மரங்களைப்பார்க்கும்பொழுதெல்லாம் ஒவ்வொருமரத்திலும், கையில் பாசமேந்திய யமனைப்போல, மரவுரியும் மான்றோலுமுடுத்த இராமனை நான் காண்கிறேன். அதிக பயமுடைமையால், என்னைச்சுற்றி எப்போதும் ஆயிரம் இராமர்கள் நிற்க நான் காண்கிறேன். இக்காடு முழுதும் இராமன் ஒருவனே இருக்கிறதாக எனக்குத் தோற்றுகிறது. இராமன் இல்லாத இடங்களிலும் அவனை நான் காண்கிறேன். தூக்கத்திலுங்கூட நான் இராமனைப்பற்றிக் கனவுகண்டு உளறிக்கொண்டு பிரக்ஞையற்றவனாகிறேன். இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால் ரகாரத்தில் தொடங்கும் ரத்தினம், ரதம் என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும்பயத்தைஉண்டாக்குகின்றன. இராகவனுடைய வீரியத்தை நான் நன்றாக அறிவேன். நீ அவனுடன் யுத்தம்செய்வது சரியன்று. அவன் பலியையும் நமுசியையும வதைக்கும் சக்தியுள்ளவன். ஓ ராவணா, நீ இராமனிடம் போர்புரிந்தாலும் சரி, போர்புரியாது விட்டாலும் சரி, நான் பிழைத்திருக்கவேண்டுமென்ற எண்ணம் உனக்கிருந்தால், அவன் பெயரை என்முன் சொல்லாதே. இவ்வுலகத்தில் தருமத்தைச் செய்துவந்த சாதுக்கள் அநேகர் பிறர் குற்றங்களுக்காக மாண்டிருக்கிறார்கள். அவ்வாறு உன்குற்றத்துக்காக நான் மாளவேண்டிவரும். ஆகையால், நீ உன் இஷ்டப்படி செய். நான் உனக்குத் துணைவரேன். மிகுந்த காந்தியும் வீரமும் பலமும் உடைய இராமன் அரக்கர் குலத்துக்கு யமனாவது நிச்சயம். ஜனஸ்தானத்திலிருந்த கரன் சூர்ப்பணகையின்பொருட்டுக் குற்றமற்ற இராமனோடு எதிர்த்து மாண்டுவிட்டால் அது எவ்வாறு இராமனுடைய குற்றமாகும், இதை நீ நன்றாக யோசித்துச் சொல்லு. நீ என் நண்பன்

மாரீசன் அடைந்த பயம்.

ஆகையால் நான் உன் நன்மையை நாடி இந்த உண்மையைச் சொன்னேன். நீ என் சொல்லைக் கேளாதுவிடில் உன்னுடைய பந்துக்களுடன் இராமனால் போரில் மாண்டு விடுவாய்."

நாற்பதாஞ்சருக்கம்.

இராவணன் வெகு கோபங்கொண்டு தான்சொன்னபடி செய்ய மாரீசனைக் கட்டளையிடல்.

வெகு நியாயமாக மாரீசன்சொன்ன நன்மைபயக்கும் சொற்களை, இறந்துபோக எண்ணினவன் மருந்தை உட்கொள்ளாதவாறுபோல, இராவணன் ஒத்துக்கொள்ளவில்லை. அன்றியும் வெகு அநுகூலமாகப் பேசின மாரீசனை நோக்கி, அரக்கர் மன்னவனான இராவணன், தனக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டபடியால், பின்வரும் கடுஞ்சொற்களைச் சொன்னான்:—"ஓ மாரீசா, நீ என்னிடத்தில் சொன்ன சொற்கள உவர்நிலத்தில் விதைத்த விதைபோலப் பயனடையமாட்டா. அவைகளினால் நான் பயந்து வெகு பாவியும் புத்தியற்றவனும் மானிடனுமான இராமனோடு போர் புரியாமல் விடேன். ஒரு பெண்சொற்கேட்டுத் தனது தாய், தந்தை, இராச்சியம், நட்பினர் முதலிய எல்லாரையும் துறந்து காட்டுக்கு வந்து கரனையும் வதைசெய்த அவ்விராமனுடைய உயிர்க்குயிரான மனைவியை நான் உன் கண்முன்பாக அபகரிக்கப்போகிறேன். இவ்வண்ணம் நான் மனத்தில் உறுதி செய்துகொண்டேன். அதனை மாற்றத் தேவாசுரர்களுடன் கூடிய இந்திரனாலும் முடியாது. நான் உன்னிடம் வந்து இக்காரியத்தின் நன்மை தீமையை, அல்லது இதனால் வரும் அபாயங்களை, அல்லது இதை நடத்தி முடிக்க

இராவணன் மாரீசனைப புத்திசொல்ல வேண்டாமெனல்.

வேண்டிய உபாயங்களைப்பற்றிக் கேட்டிருந்தால் நீ இப்புத்திகளை எனக்குச்சொல்லத்தகும். அப்படிக்கேட்டிருந்தாலும் தன்க்ஷேமத்தை விரும்பிய நல்லமந்திரி அரசன்முன் கைகூப்பிநீ் தான் சொல்லப்போகிறவைகளைச் சொல்லவேண்டும். அவை அரசன் மனத்திற் கொவ்வாதவைகளாக விருப்பின், அவைகளை வெகு மெதுவாகவும் நன்மைக்காக வென்று வெகு உபசாரத்துடனும் சொல்ல வேண்டுமன்றோ? மரியாதையுடன்விண்ணப்பம் செய்யப்படவேண்டிய அரசர்கள், மரியாதையின்றிக் கர்வமாகச் சொல்லப்படும் சொற்களைச் சகிப்பார்களா? ஒப்பற்ற பராக்கிரமம் பொருந்திய மன்னர்கள் அக்கினி, இந்திரன், சோமன், வருணன், யமன் என்னும் ஐந்து தேவர்களுடைய தன்மைகளை உடையவர்களாய்க் கொடுமை, பராக்கிரமம், நன்மை, அன்பு, தண்டஞ்செய்தல் முதலியவைகளை வகித்திருக்கின்றார்கள். ஆகையால், எக்காலத்திலும் அரசர்கள் மரியாதையுடன் பூசிக்கப்படத்தக்கவர்கள். நீ இந்த இராஜநீதியை அறியாமல் அஞ்ஞானத்தில் முழுகி, உனது கெட்டகுணத்தால் உன்னிடம் விருந்தாக வந்த என்னைப் பார்த்து இக்கொடுமையான வாசகங்களை மொழிந்தாய்.

தான் சொல்லவந்தசெய்யச சொல்லல.

ஓ ராக்ஷசா, நான் உன்னிடம இந்த விஷயத்தின் நன்மை தீமைகளைப் பற்றியாவது தகுதியைப்பற்றியாவது கேட்கவரவில்லை. நான் உன்னுடைய உதவியை மட்டும் கேட்டேன். நீ செய்யவேண்டிய உதவி இதுதான் : வெள்ளிமயமான புள்ளிகளையுடைய ஒரு பொன்மான் உருவங்கொண்டு, இராமனுடைய ஆச்சிரமம் சென்று, சீதைமுன்பாக உலாவி, அவள் மனத்தில் ஆசை உண்டாக்கி, பின்பு நீ உன்னிஷ்டப்படி போ. பொன்மானாகச் சென்ற உன்னைச் சீதை கண்டு வியப்புற்று ‘இம்மானை எனக்குச் சீக்கிரம் பிடித்துக்கொடுங்கள்’ என்று தனது கணவனாகிய இராமனிடம் சொல்லு

வாள். உன்னைத் துரத்திக்கொண்டு இராமன் வெகுதூரம் தொடர்ந்து வந்த பிறகு, நீ இராமன் கதறுவதுபோல் 'ஓ சீதா, ஓ லக்ஷ்மணா' என்று கூப்பிடு. அதைக் கேட்டவுடன் இராமனுக்கு ஆபத்துநேரிட்டதாகச் சீதை கருதி லக்ஷ்மணனைப் போய்ப்பார்க்கும்படி சொல்லுவாள். லக்ஷ்மணனும் தமையன்மேல் வைத்த அன்பால் இராமனைத் தேடிச்செல்லுவான். இவ்வாறு இராமனும் லக்ஷ்மணனும் அவ்விடம் விட்டுப் போனவுடன், இந்திரன் சசியைக் கொண்டுசென்றதுபோல, நான் சீதையை அவ்விடமிருந்து கவர்ந்துகொண்டு போய்விடுவேன். இது செய்துவிட்டு, ஓ ராக்ஷசா, நீ உன்னிஷ்டப்படி எவ்விடம் போகவேண்டுமோ அவ்விடம்போ. நானிந்த உபகாரத்துக்காக உனக்கு என்னுடைய இராச்சியத்தில் பாதி கொடுக்கிறேன். நண்பனே, என்னுடைய இக்காரியத்தை முடிப்பதற்காக நீ புறப்பட்டுத் தண்டகாரணியம் செல்லு. நானும் என் இரதத்திலேறிக்கொண்டு உன்பின்னே வருகிறேன். யுத்தம்செய்யாமல் இராமனை வஞ்சித்துச் சீதையைக் கவர்ந்து என் காரியத்தை முடித்துக்கொண்டு நான் உன்னுடன் இலங்கைக்குத் திரும்புவேன். என்கட்டளைப்படி நீ செய்யாதபக்ஷத்தில் நான் உன்னை இப்பொழுதேகொன்றுவிடுவேன். நான் பலாத்காரம்பண்ணி உன்னைக்கொண்டு இக்காரியத்தைச் செய்விப்பேன். அரசனுடைய விருப்பத்திற்கு மாறாக நடப்பவன் ஒருகாலும் சுகத்தை அடையமாட்டான். நீ மானுருவமெடுத்து இராமனிடத்தில் போவது உன் உயிருக்கு அபாயந்தான். ஆனால் என் விருப்பத்துக்கு மாறாக நடந்தால், நிச்சயமாக உனக்குச் சாவு நேரிடும். இவைகளை ஆலோசித்து, உன் புத்திக்குத் தகுந்ததென்று தோன்றுவதை நீசெய்."

நாற்பத்தொன்றாஞ்சருக்கம்.

மாரீசன் மறுபடி தடுத்தல்.

இது ராஜாக்கினை என்று இராவணனால் தன் மனத்துக்கு விரோதமான செய்கையைச் செய்யும்படி கட்டளையிடப்பட்ட மாரீசன் அவனைப்பார்த்து, சற்றும் அஞ்சாது கோபத்தோடு கூறுவானாயினன் :—"நிசாசர, எந்தப் பாவி நீயும், உனது பிள்ளைகளும், தேசமும், மந்திரிமார்களும், எல்லாரும் ஒருங்கே அழிய இவ்விதமான போதனையை உனக்குச் செய்தான்? எந்தப் பாவிக்கு நீ சுகமாக வாழ்வது விருப்பமில்லை? உன் சாவிற்கு வழியை எவன் கபடமாக உனக்கு நல்லவழி என்று இவ்வண்ணம் உபதேசம் பண்ணினன்? பலமில்லாதவர்களாகிய உன்னுடைய பகைவர்கள் பலசாலியான இராமனுடன் உனக்குச் சண்டை மூட்டி உன்னை அழிக்கக் கருதுகிறார்கள் என்பது திண்ணம். கெட்ட எண்ணத்தை உடைய எந்த அற்பன் உனக் கிவ்வாறு புத்திசொன்னன்? உன்னுடைய அகிருத்தியத்தால் நீ அழிந்துபோகும்படி எவன் இச்சிக்கிறான்? இராவணா, கெட்ட வழியில் புகும் உன்னைத் தடுக்காத அமைச்சர்கள் கொல்லப்படத்தக்கவர்களாயினும் நீ அவர்களைக் கொல்லுகின்றிலை. தனது மனம்போனபடி கொடியவழியில் செல்லும் அரசனை அக்கொடிய வழியிலிருந்து நல்ல மந்திரிகள் தடுத்துவைப்பார்கள். ஆனால், அவ்வாறு உன்னை அடக்க நல்லமந்திரி ஒருவனுமில்லை. ராஜசிரேஷ்டனே, அரசனுடைய அருளினாலேதான் மந்திரிமார்கள் தருமார்த்த காமங்களையும் புகழையும் அடைகிறார்கள். அரசன் அருளிலன் ஆயின் அவைகள் ஒன்றும் அவர்களுக்குக் கிட்டா. அரசனுடைய துர்க்குணத்தால் குடிகளும் கஷ்டத்தை

மாரீசன் சீதையைக் கவர வேண்டாம் எனல்.

அடைகிறார்கள். கொற்றவரேறே, குடிகளுக்கு அறமும் புகழும் அரசன்மூலமாக வருகின்றன. ஆகையால், அரசன் எப்போதும் குடிகளால் பாதுகாக்கப்படத்தக்கவன். கொடியவனும், குடிகளுடைய நன்மையைக் கருதாதவனும், செருக்கடைந்தவனுமான அரசன் அரசுசெய்யவல்லனாகான். அதுபோலக் கெட்ட எண்ணமுள்ள மந்திரிகள் ஆற்றலில்லாத சாரதியால் மேடுபள்ளமுள்ள வழியில் செலுத்தப்பட்ட தேர்போல நாசமடைவார்கள். இவ்வுலகத்தில் நல்வழியில் நின்று தருமம் செய்துவந்த சாதுக்கள் அநேகர் பிறர் அபராதத்தால் தங்கள் பரிவாரங்களுடன் மாண்டிருக்கிறார்கள். நரிகளால் காக்கப்பட்ட ஆடுகள்போல, பிரஜைகள் நன்மையைக் கருதாத கொடுங்கோன் மன்னனால் பாதுகாக்கப்படும் குடிகள் செழிப்படையார்கள். கொடியவனும், துர்ப்புத்தியுள்ளவனும், ஐம்புலன்களை அடக்காதவனுமான நின்னை அரசனாகவுடைய அரக்கர்கள் அனைவர்களும் அவசியமாக நாசமடையப் போகிறார்கள். காக்கைவரப் பனம்பழம் விழுந்தாற்போல, எனக்குப் பயம் நேரிட்டதென்று நான் கவல்கின்றிலேன்; நீ உன்னுடைய சேனையுடன் விரைவில் மடிந்துபோகப் போகிறாயே என்று துக்கப்படுகிறேன். இராமன் என்னைக்கொன்று, சீக்கிரமாக உன்னையும் கொன்றுவிடப் போகிறான். போரில் சத்துருவால் கொல்லப்படுவதால் நான்கிருதார்த்தனாய்விடுவேன். இராமனைக் கண்டமாத்திரத்தில் நான் மாண்டுவிட்டதாக நீ நிச்சயித்துக்கொள். சீதையைக் கவர்ந்துகொண்டுபோய் நீயும் நின் உறவினர்களுடன் மாண்டுவிடுவாய். நீ சீதையை என்னுடைய உதவியால் ஆச்சிரமத்திலிருந்து எடுத்துவந்துவிட்டபோது நீயென்ன நானென்ன இலங்கையென்ன இராக்கதர்களென்ன உய்வதில்லை. அரக்க, உன் இதத்தை நாடித் தடுத்துச்சொல்லும் என் சொற்களை நீ கேட்கின்றாயில்லை.

கவர்ந்தால் சுற்றமித்திரர்களுடன் நாசமடைவாய் எனல்.

ஆயுள்குன்றி உயிர்போகும் பக்குவத்தில் உள்ளவர்கள் நண்பர்கள் சொல்லும் நற்புத்தியைக் கேட்பதில்லை!”

நாற்பத்திரண்டாஞ் சருக்கம்.

மானுருவங்கொண்டு மாரீசன் சீதைமுன் விளையாடுவது.

மாரீசன் பயந்து துணை செய்ய ஒருப்படல.

இவ்வாறு இராவணனைப்பார்த்துக் கடிந்துரைத்த மாரீசன் அவனிடத்தில் உள்ள பயத்தால் “நாம் இருவரும்போவோம” என்றுசொன்னான். பிறகும் அவன் இராவணனை நோக்கி “கையில் வில்லும், பாணமும், கத்தியும் பிடித்திருக்கும் இராமன் முன் நான்போனால் அவன் அந்த க்ஷணமே என்றுயிரை வாங்கிவிடுவான். இராமனை எதிர்ப்பட்ட பின் உயிர் தப்பி வருகிறதென்பது இல்லை. அவன் உன் உயிருக்குக் காலபாசம்போல்வன். நீ கெட்டவன். உனக்கு என்றால் என்னசெய்ய முடியும்? நான் இதோ போகிறேன். உனகரு வெற்றி உண்டாகுக” என்று சொன்னான். மாரீசன் இவ்வாறு சொன்னதைக் கேட்டு இராவணன் சந்தோஷமடைந்து அவனை இறுகத் தழுவி “என் விருப்பப்படிசெய்ய உடன்பட்ட இதுதான் உன் தைரியத்துக்கொத்தது. நீ முன் வேறொரு அரக்கனாக விருந்தாய்; இப்பொழுதுதான் மாரீசன் ஆயினாய். இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பேய்போன்ற முகங்களையுடைய சழுதைகள் பூட்டி விளங்கும் இந்த இரதத்தில் என்னுடன் சீக்கிரமாக ஏறு. சீதையை மயக்கிவிட்டு உன் இஷ்டப்படி நீ போ. இராமனும் லக்ஷ்மணனும் போகத் தனியேயிருக்கும் சீதையை நான் தூக்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்” என்று கூறினான். பின்னர் இராவணனும் மாரீசனும் தேவவிமானம்போன்ற அந்தத் தேர்மீதேறி அவ்வாச்சிரமத்தைவிட்டு வேகமாகப் புறப்பட்டார்

மாரீசனும் இராவணனும் தண்டகாரணியம் சேர்தல்.

கள். அவர்கள் வழியில் அநேகநாடுகள், நகரங்கள், வனங்கள், மலைகள், ஆறுகள் முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு தண்டகாரணியம் சேர்ந்து இராமருடைய ஆச்சிரமத்தை அடைந்தார்கள். தேரினின்றும் இறங்கி இராவணன் மாரீசனுடன் அவ்வாச்சிரமத்தைப் பார்த்தான். பின்பு அவன் மாரீசன் கையைப் பற்றிக்கொண்டு "அதோ வாழைகளால் சூழப்பட்டுத் தோன்றுகிறதே அதுதான் இராமனுடைய ஆச்சிரமம். இனி நீ நாம் இங்குவந்தகாரியத்தைச் செய்யக்கடவாய்" என்றான்.

மாரீசன் மானுருவம் கொள்ளல

அதைக்கேட்ட மாரீசன் ஆச்சரியமான ஒரு மானுருவங்கொண்டு இராமருடைய ஆச்சிரமத்துக்கு முன்புறத்தில் சென்று உலாவினான். பார்ப்பதற்கு அந்த மானுடைய கொம்பின் நுனிகள் இரண்டும் இந்திரநீலக்கற்கள் போல விளங்கின. அதன் முகத்தோற்றம் கறுத்தும் வெளுத்தும் இருந்தது. அதன் வதனம் செந்தாமரைபோலவும் காதுகள் நீலோற்பலம் போலவும் இருந்தன.

மாயமானின வர்ணனை.

அதன்கழுத்துக் கொஞ்சம் உயர்ந்திருந்தது; உதடுகள் இந்திரநீல ரத்தினத்திற்கொப்பாக விளங்கின. வயிறு முல்லைமலரும் சந்திரனும் வைரக்கல்லும் போல விளங்கிற்று; பக்கங்கள் இரண்டும் இலுப்பைப்பூப்போலவும் தாமரைப்பூவின் தாதுபோலவும் விளங்கின. காற்குளம்புகள் வைடூரியக்கற்கள்போல இருந்தன; துடை மெல்லிதாயும் சந்துகள் திண்ணியனவாயும் இருந்தன. இந்திரவில்லுப்போலப் பலவித வருணங்கள்பொருந்தியவால் உயர்த்தப்பட்டு இருந்தது. சீதையினுடைய மனத்தைக் கவர்வதற்காக ஒரு கணப்பொழுதிற்குள் மாரீசன் அநேகவிதமான அழகிய இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டாற்போன்ற புள்ளிகளையுடைய பொன்மான் உருவங்

கொண்டு அவ்வழகானகாட்டையும் இராமருடைய ஆச்சிரமத்தையும் பொலிவுறச்செய்து பசும்புற்றரைகளில் புல் மேய்ந்து திரிந்தனன். நூற்றுக்கணக்கான வெள்ளிப்புள்ளிகளையுடைய அந்த அழகியமான் தழைத்திருக்கும் மரங்களின் கொழுந்துகளைக் கடித்துத்தின்று திரிந்தது. வாழைத் தோட்டத்துள்போவதும் கர்ணிகார வனத்தைச் சுற்றுவதும் சீதையின் கண்முன் எதிர்ப்படுவதுமாகத் தாமரைமலர்போன்ற முதுகையுடைய அழகான அந்தமான் இராமருடைய ஆச்சிரமத்தைச் சுற்றிக்கொண்டு தன் இஷ்டப்படி திரிந்தது. அது சிலநேரம் ஓரிடம் மேய்ந்துவிட்டு மற்றோரிடத்துக்கோடும்; மறுபடி அங்கிருந்து திரும்பும்; சிறிதுகாலம் வெகுவேகமாக ஓடித் திரும்பும்; சிறிதுநேரம் துள்ளிவிளையாடும்; சிறிதுவேளை தரையில் படுக்கும்; சிலவேளை மான்கூட்டங்களுடன் கூடி ஆச்சிரமத்தின் வாயிலில் வந்து நின்றுவிட்டு ஓடும்; மறுபடி மான்கூட்டங்கள் தொடரத் திரும்பிவரும். இவ்வாறாக மானுருவங்கொண்ட மாரீசன், சீதை தன்னைப்பார்க்கவேண்டுமென்ற கருத்தினால், அவ்விடத்தில் சுற்றித் திரிந்தான். அந்த மானைக்கண்டு, அக்காட்டிலுள்ள மற்றை மான்கள் அதனருகிற் சென்று, அதை மோந்துபார்த்து, பின் பல திசைகளிலும் ஓடின. மாரீசன் மான்களைக்கொன்று புசிப்பவனாயினும், தன் தன்மை வெளிப்படாதிருக்கும்படி, அவைகளை ஒன்றும்செய்யாது மோந்துகொண்டு திரிந்தான்.

சீதை மானைக் காணல்.

அத்தருணத்தில் அழகிய கண்களையுடைய சீதை மலர் கொய்யும்பொருட்டு அக்காட்டுக்கு வந்தாள். மதர்த்த நோக்கையும், மனத்திற்கு ரம்மியமான முகத்தையும் உடைய அவ்வுத்தமி அங்குமிங்கும் சென்று கர்ணிகாரம், அசோகம், மாமலர்முதலிய புஷ்பங்களைக் கொய்துகொண்டிருந்தாள். ஆரணியத்தில் வாசஞ்செய்வதற்குத் தக்கவளல்லாத

அந்தச் சீதை, முத்தும் மாணிக்கமும்போன்ற புள்ளிகளையும், அழகிய பற்களையும், வெள்ளிபோன்ற உரோமங்களையுமுடைய அம்மானைக் கண்டுவியப்படைந்து, கண்ணிமையாமல் வெகு சந்தோஷத்தோடும் அன்போடும் பார்த்தாள். அந்த மாயமானும் அவளைக்கண்டு அதிக வேடிக்கையாகத் துள்ளிக்கொண்டு அக்காடெங்கும் திகழும்படி திரிந்தது. தான் ஒருபொழுதும் காணாததும் இரத்தினத்தாலிழைக்கப்பட்டதுபோன்று விளங்குவதுமான அம்மானைச் சீதை கண்டு வெகு ஆச்சரியமடைந்தாள்.

நாற்பத்துமூன்றுஞ்சருக்கம்.

இராமர் சீதையைப் பாதுகாக்க லக்ஷ்மணருக்குக் கட்டளையிட்டு மாயமானைத் தொடர்ந்து செலுதல.

குற்றமற்ற அங்கமுள்ளவளும் அழகான தங்கச்சலங்கை அணிந்த இடையினளுமாகிய சீதை அவ்வாறு மலர் கொய்யும்பொழுது, இருவிலாப்பக்கங்களும் வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்டதுபோல விளங்கும் அப்பொன்மானைக் கண்டு வெகு சந்தோஷமடைந்து, ஆயுதபாணிகளாகிய தனது கணவனையும் லக்ஷ்மணரையும் அவ்விடத்துக்கு வரும்படி கூப்பிட்டாள். வைதேகியால் அழைக்கப்பட்ட அப்புருஷசிங்கங்கள் அவ்விடம் சென்று நான்குபுறத்தும் பார்த்து அம்மானைக் கண்டார்கள்.

சீதை மானை இராமலக்ஷ்மணர்களுக்குக் காட்டல.

அதைக்கண்டதும் லக்ஷ்மணா சந்தேகப்பட்டு இராமரைநோக்கி "இந்தமானை ராக்ஷச மாரீசன் என்று நான் எண்ணுகிறேன். வேண்டிய உருவங்களை எடுத்துக்கொள்ளும் அந்தப் பாவி மானுருவங் கொண்டு இவ்விடம் வேட்டைக்கு வந்த அநேக அரசர்களைக் கொன்றிருக்கிறான். அந்த மாபாவிதான். இப்பொழுது

லக்ஷ்மணர் இது மாயமான் எனல்.

இந்த மாயமான் ரூபங்கொண்டிருக்கிறான். இது கந்தர்வ நகருக்கொப்பாக இருக்கிறது. ஓ புருஷசிரேஷ்ட, உலகத்தில் இப்படி இரத்தினமிழைத்த மான் உண்மையாக இல்லை. ஆனபடியால், உலகநாயக, இது மாயை என்பதற்குச் சந்தேகமில்லை'' என்று சொன்னார்.

லக்ஷ்மணர் அப்படிச் சொன்னதைச் சீதை தடுத்து, மாரீசனுடையமாயை மனத்தைக் கவர, புன்னகைசெய்து, சந்தோஷங்கொண்டு, கணவனைப்பார்த்து "என் நாதா, இவ்வழகானமான் என்மனத்தைக் கவருகின்றது. தாங்கள் இதை எனக்குப் பிடித்துத்தரவேண்டும். நமது விளையாட்டுக்கு இது உபயோகப்படும். இங்கு நமது ஆச்சிரமத்துக்குச்சமீபத்தில், கவரிமான், ஸ்ருமரம், புள்ளிமான், கரடி, குரங்கு, கின்னரம் முதலிய வெகு அழகான பலமிருகங்கள் கூட்டங்கூட்டமாகத் திரிகின்றன. அவைகளைப்பார்ப்பதற்கு வெகு அழகும் மனோகரமுமானவைகளே ஆயினும், இந்தமானைப்போல ஆச்சரியமான அழகுள்ள மானை இதுவரையில் நான் கண்டதேயில்லை. இது சாயலாலும், ஒளியாலும் அழகாலும் ஒப்பற்றது. இரத்தினம் போன்ற பலவிதமான புள்ளிகளையுடைய இவ்வழகான மான் சந்திரன்போலத் தனதுகாந்தியால் இக்காடெங்கும் ஒளிரச்செய்கிறது. என்ன ஆச்சரியம்! என்ன அழகு! என்னகாந்தி! என்னமதுரமான குரல்! விசித்திரமான தேகத்தையுடைய இம்மான் என் மனத்தை முழுதும் கொள்ளைகொண்டது. உயிருடனே இம்மானைத் தாங்கள் பிடிக்கக்கூடுமானால் மிக ஆச்சரியமாக இருக்கும். எல்லாரும் இதைக் கண்டு வியப்படைவார்கள். வனவாசம் முடிந்து நாம நமது இராச்சியத்தை அடைந்தபோது, இம்மான் நமது அந்தப்புரத்திற்கு ஒரு அலங்காரமாக இருக்கும். இதைக்கண்டு நாம் களிப்பதுபோலப் பரதரும், எனது மாமிமார்களும் களிப்பார்களென்பதில் சந்தேகமேயில்லை. இம்மானை உயிரு

சீதை மானைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டல்.

டன் பிடிக்க முடியாதாயின் இதனுடைய தோல்கூட அழகாகவிருக்கும். கொல்லப்பட்ட இதனுடைய தங்கநிறமான தோலைத் தருப்பாசனத்தின்மேல் பரப்பி அதன்மேல் தங்களுடன் உட்கார நான் இச்சிக்கிறேன். தங்கள் தலைவர்களை இவ்வாறு ஒன்று செய்யவேணடுமென்று ஏவுவது ஸ்திரீகளுக்குத் தகாது; மரியாதையுமன்று. ஆயினும் நான் இந்தமானின் தேககாந்தியைக் கண்டு மயங்கி இருக்கிறேன்" என்று வேண்டினள்.

இராமர் பொன்போன்றமயிரும், இரத்தினங்களால் செய்யப்பட்டாற்போன்ற கொம்புகளும, இளஞ்சூரியன் போன்ற நிறமும், நக்ஷத்திரங்களுக்கொப்பான புள்ளிகளுமுடைய அம்மானைக்கண்டு மிகவும் வியப்புற்றார். அவ்வழகான மானைச்கண்டு மயங்கிச் சீதையின் வேண்டுகோளால் தூண்டப்பட்ட இராமர், வெகு சந்தோஷத்துடன் தமது தம்பியைப்பார்த்து "லக்ஷ்மண, சீதை இம்மானிடத்தில் மிக ஆசைப்பட்டிருக்கின்றாள். இவ்வளவு அழகானமான் நமது வனவாசகாலத்தில் நேர்ந்தது துர்லபந்தான். இதற்குச் சமானமான மான் தேவேந்திரன், குபேரன், முதலியவர்களுடைய நந்தனவனங்களிலேகூட இல்லை. அப்படியாயின் இவ்வுலகத்தில் இதற்கொப்பான மான் இருக்கப் போகிறதா? குறுக்கும நெடுக்குமாக இதன் உடன்மேலுள்ள உரோமமும் அதன்மேலுள்ள பொற்புள்ளிகளும் வெகுநேர்த்தியாக விளங்குகின்றன! அது வாய் திறக்கும் பொழுதெல்லாம வாயிலிருந்து வெளிப்படும் அக்கினிச்சுவாலைக்கொப்பான அதன் நாக்கு மேகத்தில் தோன்றும் மின்னல்போன்றிருக்கிறது. அதன்முகம் இந்திரநீலக்கல்லால்செய்யப்பட்ட பாத்திரம்போல் தோன்றுகிறது. வயிறு சங்குபோலவும் நன் முத்துப்போலவும் விளங்குகிறது. இதனுடைய ஒப்பற்ற அழகு யாருடைய உள்ளத்தைத்தான் கவராமலிருக்கும்? தங்கநிறமானதும்

இராமர் மாய மானை வியத்தல்.

அநேகவித இரத்தினங்களின் வண்ணத்தை உடையது மான இதன் ரூபத்தைக் கண்டு யார்தான் ஆச்சரியமடையார்? காட்டில் விற்பிடித்து வேட்டையாடும் மன்னவர்கள், மாமிசத்தின்பொருட்டும் வேடிக்கைக்காகவும் மான்களைக் கொல்லுகிறார்கள். லக்ஷ்மணா, அன்றியும், அவர்கள் வேட்டையாடுகையில் சிலவேளையில் காட்டில் அநேகவித இரத்தினங்களையும் பொருள்களையும் தேடிக் குவிக்கிறார்கள். அவ்வாறு காட்டில் சேர்க்கப்படும் பொருள்கள் சிறந்தவைகளன்றோ? *சுக்கிராசாரியர் மனத்தால் நினைக்க ஒரு பொருள் நூறாக விருத்தியாகிறது. பொருளைவிரும்புகிறவன் அதனை அடைவதற்கு இன்னமுயற்சி செய்யவேண்டுமென்ற விசாரமின்றி நேர்ந்தவழியில் தேடிச் சம்பாதிப்பது தான் பொருள் என்று நீதிசாஸ்திரமறிந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சீதை இந்த இரத்தினம்போன்ற மானின் தங்கத்தோலின்மேல் என்னோடுகூட உட்கார விரும்புகிறாள். புள்ளிமான்தோல், கவரிமான்தோல், ஆட்டுத்தோல், மற்ற மிருகத்தின் தோல் முதலியவைகளில் ஏதாவதொன்று இந்த மானின் தோலுக்குச் சமானமாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. உலகத்தில் இரண்டு மான்கள்தான் சிறந்தவைகள். பூமியில் சஞ்சரிக்கும் இது ஒன்று. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மிருகசீர்ஷம் மற்றொன்று.

லக்ஷ்மணா, நீ சொல்லுகிறபடி இது அரக்கன் மாயையாகவிருந்தாலும் நான் அவசியம் இதை வதைசெய்யவேண்டியவன். மாரீசன் என்ற அக்கொடிய பாவி இக்காட்டில் அநேக முனிவர்களை வதைசெய்திருக்கிறான். அல்லாமல் வேட்டையாட வந்த வில்லாளிகளான அநேக வேந்தர்களையும் கொன்றிருக்கிறான். அதற்காக நான் இம்மானைக் கொல்லவேண்டும். முன்னொருகாலத்தில் இக்காட்

* இதனைப் பாரதத்தில் உத்தியோக பருவத்தில் காண்க.

வாதாபியின் சரிதம்.

டில் வாதாபி என்பவன் தபசிகள் வயிற்றில் புகுந்து அவர்கள் வயிற்றைக் கீறிக்கொண்டு வெளிப்பட்டு, * கோவேறு கழுதையின் கருப்பம் அதைக்கொல்லுவதுபோல, அவர்களைக் கொன்றான். இப்படி வெகுகாலமாகச் செய்துகொண்டிருக்கும்பொழுது ஒருநாள் அவன் மகா தபசியாகிய அகஸ்தியமாமுநிவருக்கு உணவாயினான். பின்பு, அவன் அவர் வயிற்றைப் பிளந்துகொண்டு வெளிப்பட முயற்சி செய்ததை அம்முநிவர் கண்டு புன்னகை செய்து வாதாபியை நோக்கி "அடே வாதாபி, நீ உன்பலத்தின் செருக்கால் உத்தமர்களான அநேக அந்தணர்களை இவ்வுலகத்தில் வதைசெய்தாய்; அக்காரணத்தால் நானிப்பொழுது உன்னை எனது வயிற்றில் செரிப்பிக்கின்றேன்" என்றார். ஆகையால், லக்ஷ்மணா, எப்பொழுதும் தருமத்தை இடைவிடாது நடத்திக்கொண்டு ஐம்புலன்களையும் அடக்கியாளும் என்னைப்போல்பவரை இம்சிக்கவருவானானால் இவ்வரக்கன் வாதாபியைப்போல் நாசமடைவான்.

இராமர் லக்ஷ்மணரைச் சீதையைக் காக்கக் கட்டளையிடல்.

நீ ஆயுதபாணியாகச் சீதையைச் சாக்கிரதையாய் இவ்விடத்தில் பாதுகாத்துக் கொண்டிரு. இவளை ரக்ஷிக்கவேண்டியது நமது கடமை. நானிந்தமானைப் பிடித்தாவது கொன்றாவது கொண்டுவருகிறேன். லக்ஷ்மணா, இம்மானுடைய தோலின்மேல் சீதை அதிக ஆசைவைத்திருக்கிறாள். ஆதலால் நான் இதைப்பிடிக்கப் போகிறேன். இதன்தோல் மிகவும் அழகானது. அதன் நிமித்தம் இந்த மான் இன்று நாசமடையப் போகிறது. நான் ஓரே பாணத்தால் இம்மானைக் கொன்று திரும்பி வரும்வரையில் நீ இந்த ஆச்சிரமத்தில் சீதையை வெகு சாவதானமாகக் காப்பாற்றவேண்டும். நான் இதைக்

* அச்வதரி யென்பதற்கு நேளென்றும் சிலர் அர்த்தம் சொல்லுகிறார்கள்.

கொன்று இதன் தோலுடன் சீக்கிரம் திரும்புவேன். அதிக சமர்த்தனும், வெகு பலசாலியும், புத்திசாலியுமாகிய ஜடாயுவுடன், லக்ஷ்மணா, நீ சீதையை வெகு சாக்கிரதையாக எந்தச்சமயத்தில் என்ன ஆபத்து நேரிடுமோ என்று கருதிப் பாதுகாத்துவருவாய்." என்று கூறினார்.

நாற்பத்துநான்காஞ் சருக்கம்.

மாரீசன் வதை.

இவ்வாறு தன் தம்பிக்குக் கட்டளையிட்டுவிட்டு வெகு பராக்கிரமத்தையுடைய இராமர் பொற்பிடியுள்ள தமது வாளை இடையில் கட்டினார். பின்பு இரண்டு அம்பறாத்தூணிகளை முதுகில் வீக்கி, தமக்கு ஓராபரணம்போல விளங்குவதான மூவிடங்களில் வளைந்துள்ள தமது வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு ஒப்பற்றசூரரான இராமர் புறப்பட்டார். அவ்வாறு புறப்பட்டு வந்த அம்மன்னர்மன்னனைக் கண்டு மாரீசனாகிய மான் நடுநடுங்கி ஓடியொளித்தது; மறுபடி அவர் கண்ணிற்குப் புலனாயிற்று. மானைக்கண்டவுடன் இராமர் அரையிற் கட்டிய கத்தியுடனும் கையிற்பிடித்த வில்லுடனும் அதைத் துரத்திக்கொண்டோடினார். அப்போது அந்த மான் அவரைப் பார்த்து வெருண்டு தனது உருவத்தால் அக்காடு முழுதையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு ஓடினது. அம்மான் ஒருகால் பாணம்பாயும் தூரத்துக்கப்பால் ஓடிச்செல்லும்; ஒருகால் கிட்டி வந்து ஆசைகாட்டும்; ஒருகால் தன் உயிருக்கு அபாயம் வந்ததாகப் பயந்து வெகுகலக்கமெய்தி ஆகாயத்தில் எழும்பிக் குதித்தோடும்; ஒருகால் காட்டில் வந்து கண்ணுக்குப் புலனாகும்; ஒருகால் புலனாகாது மறைந்துவி

இராமர் மானைப் பிடிக்கப் புறப்படல்.

மானினுடைய ஓட்டம்.

டும். அது கண்டங் கண்டமான மேகக்குழுவில் மறைகின்ற சரத்கால சந்திரன்போல் தோன்றி மறையும்; உடனே தூரத்தில்போய்க் காணப்படும். இவ்வாறு மானுருவங்கொண்ட மாரீசன் இராமர் கண்களுக்கு எதிர்ப்பட்டும் எதிர்ப்படாது ஓடிமறைந்தும் அவரை ஆச்சிரமத்திலிருந்து வெகு தூரம் கொண்டுசென்றான். இராமர் தம்மை அவ்வளவு தூரம் அம்மான் இழுத்துவந்ததற்காக வெகுகோபங்கொண்டு சிறிதுகலங்கிப் பசும்புற்றரையில் ஒரு நிழலின் கீழ் நின்றார். அப்பொழுது மாரீசனாகிய அம்மான் மற்றைமான்கள் சூழச் சமீபத்தில் வந்து அவர் கண்களுக்குப் புலப்பட்டது. அப்போது இராமர் அதைப்பிடிக்க விரைந்து ஓடினார். உடனே அம்மான் பயத்தால் ஒரு நொடிப்பொழுதில் ஓடி மறைந்தது; மறுபடி கொஞ்சத் தூரத்தில் ஒரு மரத்தின் அருகில் காணப்பட்டது. சத்துருக்களை வதைக்கும் வல்லமையுள்ளவரும் பலசாலியுமான இராமர் அதைக்

இராமர் மானைக் கொல்ல நிச்சயித்தது.

கண்டு வெகு கோபங்கொண்டு, அதனைக் கொல்ல உறுதிசெய்து, சூரியனுடைய கிரணங்களைப்போல ஜ்வலிக்கும் ஒரு பாணத்தை எடுத்துத் தமது பலமான வில்லில் பூட்டினார். அவர் வில்லை நன்றாக வளைத்துப் பெருமூச்செறியும் சர்ப்பம்போன்றதும் பிரமதேவரால் செய்யப்பட்டதுமான நெருப்புப்போன்ற அப்பாணத்தை அம்மானைக்குறிப்பிட்டு எய்தார். இடிக்கொப்பான அந்த உத்தம பாணம் மானுருவங்கொண்ட மாரீசன் தேகத்தைக் கிழித்து அவனுடைய இருதயத்தையும் பிளந்தது. ஆயுள் முடிந்த அவ்வரக்கன் ஒருபனையுயரம் ஆகாயத்தில்எழும்பி

மானுருவங்கொண்ட மாரீசன் மாண்டது.

வெகு பயங்கரமாகக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்தான். பிராணன்போகும் சமயத்தில் அவன் "எவ்வித உபாயஞ்செய்தால் சீதை லக்ஷ்மணனை ஆச்சிரமத்தை விட்டு அனுப்புவாள்; அவள் தனித்திருக்கையில் இராவ